விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 21 வியாழக்கிழமை (07.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 292

ராம்கோ


MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்வில் வேந்தர், துணை வேந்தர் மற்றும் பிரமுகர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளைக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.







# புதிய அரசியல் கட்சிகளின் பதிவு அடுத்த வாரம் ஆரம்பமாகும்!

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு


(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான நேர் முகப் பரீட்சை அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 2010ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதன் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டணி உட்பட்ட 60ற்கும் அதிகமான விண்ணப்பங்கள் தம்மை புதிய (20ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரகுமாரனின் பாதுகாப்புக்கு அக்கறை காட்டுகிறது அமெரிக்கா



(நியூயோர்க்)

நாடுகடந்த தமிழீழ அரசின் முதலாவது பிரதம மந்திரியாக கடந்தவார இறுதியில் தெரிவுசெய்யப்பட்ட உருத்திரகுமாரனின் பாதுகாப்புத் தொடர்பாக அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீண்டகாலமாக அமெரிக்காவில் வசித்து வருபவரும், அமெரிக்கச் சட்டத்துறை வல்லுநருமான விஸ்வநாதன் உருத்திரகுமாரன் ஒரு அமெரிக்க பிரஜையாவார்.

இந் நிலையில் நாடுகடந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகளின் நடவடிக்கைகள் உளவுத்துறையினரால் கண்காணிப்பு!

(கொழும்பு)

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் உளவு பார்க்கப்படுவதாக சிங்கள இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு ஆதரவான இராணுவ அதிகாரிகளின் நடவடிக்கைகள் இவ்வாறு கண்காணிக்கப்படுவதாக குறித்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உளவுப் பணிகளை மேற்கொள்வதற்காக விசேட பிரிவொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு ஆதரவான உயர் இராணுவ அதிகாரிகள் என சந்தேகிக்கப்படும் அதிகாரிகளின் சாரதிகளாகவும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகவும் உளவாளிகள் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு உளவாளிகள் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் உயர் இராணுவ அதிகாரிகள் கருத்துக்களை வெளியிட அஞ்சுவதாக குறிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் தடைக்கு எதிரான மனு தள்ளுபடி

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கான தடையை நீக்கக் கோரி நடைபெற்று வரும் வழக்கில், தங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என பழ.நெடுமாறன் விடுத்துள்ள கோரிக்கையை சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு நடுவர் மன்றம் நிராகரித்துள்ளது. விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்து மத்திய அரசு கடந்த மே மாதம் (20ஆம் பக்கம் பார்க்க)

## ☞ உள்ளே




கைதிகளின் ஆடைஅணிந்து கதறுகிறார் சரத் பொன் சேகா...

சிறப்புக் கட்டுரை

## கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்று கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான ஊதியம் பெறாத நிலையிலும் குறைந்தளவு ஊதியம் பெற்றும் தொண்டர் ஆசிரியர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் வேறுமாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதும் தமக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் போது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடி விவகாரம் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பங்குபற்ற வேண்டியுள்ளதன் காரணமாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக விசாரிக்கப்பட்டு வரும் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பிலான வழக்கை, ஒத்திவைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

இரண்டாவது நாளாக இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றபோது முறைப்பாட்டாளர் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



உலக சிறுவர் தினத்தையொட்டி புலோலி கிராம சிறுவர் இல்லத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜின்கோ மங்கல விளக்கேற்றுவதையும் இல்லச் சிறார்களின் கலை நிகழ்வுகளையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் – கரவெட்டி செய்தியாளர்)

## சுன்னாகம் சமுர்த்தி வங்கி கிளையில் திருட்டு முயற்சி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சமுர்த்தி வங்கிக் கிளையில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டு முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. பாதுகாப்புப் பெட்டகத்தில் பெறுமதிவாய்ந்த பொருள்கள் வைக்கப்பட்டிருந்தமையால் பாரிய அளவில் திருட்டு எதுவும் இடம்பெற வில்லை என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் நிலையத்துக்கு அண்மையில் உள்ள குறித்த வங்கியின் கூரையை பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்து ஒருசில பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக உடுவில் பிரதேச செயலகத்திலும் முறையிடப்பட்டுள்ளது.(ச–5)

## முதியோர், சிறுவர். கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

முதியோர் சிறுவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பெருமாள் கோவில் லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் பொது சுகாதார வைத்திய பரிசோதகர் புண்ணியமூர்த்தி ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக, யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, விசேட விருந்தினர்களாக சுகாதார வைத்திய அதிகாரி திருமதி மரியதாஸ் ஆகியோர் கலந்து கொள்கின்றார்.(ச–3)

## ஆசிரியர்தின விழா

யா/புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையின் அபிவிருத்திச் சங்கமும் மாணவர்களும் இணைந்து நடத்தும் ஆசிரியர் தினவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 11.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக ஹரித்தாஸ் முன்னாள் இயக்குநர் ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச–3)

# ஏழு வயதுச் சிறுவனை வேலைக்கு அமர்த்தி துன்புறுத்திய குடும்பஸ்தர் விளக்கமறியலில்

## அரியாலையில் சம்பவம்

தென்னிலங்கையைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவனை வேலைக்கு அமர்த்தி துன்புறுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தரை நாளை வரை விளக்கமறிலில் வைக்குமாறு யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தென்னிலங்கையைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவனை வேலைக்கு அமர்த்திய குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை பொலிசார் கைது செய்தனர்.

யாழ்ப்பாணப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தரை இரண்டு நாட்கள் யாழ் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க யாழ் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வயது குறைந்த சிறுவனை வேலைக்கமர்த்தி துன்புறுத்தியதாக தெரிவித்து யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் யாழ்ப்பாணப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் குறித்த நபரை இரண்டு நாட்கள் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன் தென்னிலங்கையைச் சேர்ந்த சிறுவனை யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்து சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் தற்போது குறித்த சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிசாரின் பாதுகாப்புடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென்னிலங்கைச் சிறுவனை வேலைக்கு அமர்த்திய நபர் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவரெனவும் தென்னலங்கைக்கு சுற்றுலா சென்றபோதே குறித்த சிறுவனை அழைத்து வந்து வேலைக்கு அமர்த்தி துன்புறுத்தி வந்ததாகவும் அயலவர்கள் தெரிவித்துள்ளனர். (ச–5)

செல்லா சினிமா



மமுட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்

மூன்று ரிக்கெற் வாங்கினால் ஒரு ரிக்கெற் இலவசம்

இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு

வந்தே மாதரம்

அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்

D.இமான் ஹென்றி அரவிந்த்.T.

பாடல்கள் : வைரமுத்து, நந்தலாலா, சினேகன், விவேகா.

காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் மையம் யாழில்!

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் மையம் யாழ்.பொது நூலகத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய நிதி மற்றும் தொடர்பாடல் அமைச்சு கவுன்சிலர் விம் பிரூட் ஹோம்மி தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒப்பந்தம் இன்று யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவுடன் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டார்.யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ஐரோப்பிய ஒன்றிய நிதி மற்றும் தொடர்பாடல் அமைச்சு கவுன்சிலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்குமேலும் தெரிவிக்கையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் மையம் விரைவில் யாழ். பொது நூலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் தொடர்பில் யாழ்ப்பாண மக்கள் தொடர்பைப் பேண முடியும். அத்துடன் பிரேசிலிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமையகத்தின் வெளியீடுகள் யாழ். தகவல் மையத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டார். (ச–5)

# நவீன சந்தைப் பகுதியிலிருந்த 6 வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## பொலிஸ் அராஜகம் எனக் குற்றச்சாட்டு

(யாழ்பபாணம)

சட்டவிரோதமான முறையில் பொருட்களைக் கடைகளுக்கு முன்பாக வைத்திருந்தாகத் தெரிவித்து யாழ் நவீன சந்தை உட்பகுதியிலிருந்த ஆறுக்கு மேற்பட்ட கடை உரிமையாளர்கள் யாழ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பொலிஸாருடன் யாழ்.மாநகரசபை ஊழியர்களும் இணைந்து இந்நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறப்பட்டது.

இதேவேளையாழ்ப்பாணம்பொலிஸார் அராஜகமான முறையில் தம்மிடம் நடந்துகொள்வதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரும் மாநகர சபையும் இணைந்து மாநகரசபை சட்டத்திற்கு அமைவாக நடைபாதை வியாபாரத்தை அகற்றுவதாகத் தெரிவித்து தினம் தினம் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்து பொருட்களைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்கின்றனர். பின்னர் சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தும் வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்காக மாலை வேளைகளில் பிரதான வீதியொன்றில் தனியார் போக்குவரத்து வண்டிகளை நிறுத்துவதற்கான அனுமதியை பொலிசார் மறுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்

அதேவேளை, தென்னிலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த அரசாங்கத்தின் ஆதரவாளர் ஒருவருக்கு மட்டும் அனுமதி வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச–5)

# சிகரெட் நெருப்பு உடையில் விழுந்ததால் குடும்பஸ்தர் ஒருவர் தீப்பிடித்து மரணம்

## கண்டி வைத்தியசாலையில் பரபரப்பு

(கொழும்பு)

கண்டி வைத்தியசாலை ஊழியர் ஒருவர் நேற்று புதன்கிழமை காலை உடல் கருகி உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பாக கண்டி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கண்டி சுஹும்பொல எனும் இடத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். இவர் புகைப்பிடித்துக் கொண்டிருந்த போது அது தவறி உடையில் விழுந்ததால் ஏற்பட்டதீயில் அவர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை வைத்தியசாலை நிர்வாகமும் விசாரணையொன்றினை மேற்கொண்டு வருகின்றது. இறந்தவரின் பிரேத பரிசோதனை நேற்று மாலை வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டது. (ச–5)

நிசாந் ரவல்ஸ்



யாழ் – கொழும்பு வான் சேவை

ஒரு ஆசனத்துக்கு 1000 ரூபா மட்டும்

ரொப்பிங் அயர் 13000 ரூபா மட்டுமே

தினசரி காலை 6.00மணிக்கு

தொடர்புகளுக்கு

T.P - 0729675083
0778264701
0770236465

மந்திராணி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(C-1356)

**விற்பனைக்கு**

இல.96, காதி அபூபக்கர் வீதியில் சகலவசதிகளுடன் வீடும்கடையும், 33, கண்ணாபுரத்தில் 30 அடிநீளம் 15 அடி அகலம் கொண்ட பிளாட் கட்டிடத்தில் அமைந்த கடையும், 3 அறைகள் ,2 வராந்தா , சமையலறை, குளியலறை வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு :

T.P : 0773317904
021 222 5975

(2604)

**விற்பனைக்கு**

யாழ்–காரைநகர்பிரதானவீதியில் சண்டிலிப்பாய் 7 ஆம் கட்டையடியில் (ஐயனார் சிலைக்கு அருகாமையில்) உள்ள இரண்டு கடைக் கட்டிடமும், மேல்மாடியும் குழாய்க்கிணற்றுடன்கூடியசிறிய வீட்டுடன் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

(2619) T.P : 0778445726

நவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட


சித்திரப் பயிற்சி

08.10.2010 அன்று பி.ப 4.00 ஆரம்பம்

IAT சித்திரப் பயிற்சி நிறுவனம்.

ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.

(2622) T.P : 0789405844


மிகக் குறைந்த IDD கட்டணங்களை
வினாடி அடிப்படையிலான கணக்கீட்டுடன்
Dialog இடமிருந்து பெறுங்கள்
இங்கிலாந்து
அமெரிக்கா
சைப்ரஸ்
மலேஷியா
ரூ. 3/-
கனடா
இத்தாலி
அவுஸ்திரேலியா
ரூ. 5/-
பிரான்ஸ்
ரூ. 2/-
இந்தியா
ஜோர்தான்
சவுதி அரேபியா
ரூ. 10/-
லெபனான்
குவைத்
சீனா
தாய்லாந்து
ஜப்பான்
சுவிற்சலாந்து
ரூ. 4/-
பஹ்ரெயின்
சிங்கப்பூர்
ஜேர்மனி
தென்கொரியா
ஐக்கிய அரபு
இராச்சியம்
ரூ. 14/-
D Sign
ரூ. 177/- ற்கு ரீலோட் செய்து மிகக் குறைந்த IDD கட்டணங்களை
மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்
MY10+ 5 IDD, எந்தவொரு ரீலோட், எந்தவொரு பிற்கொடுப்பனவு
பக்கேஜ் மற்றும் Dialog IDD Calling கார்ட்களுடன் இச் சலுகை கிடைக்கின்றது.
MY10+ 5 IDD இனைச் செயற்படுத்த 676 ற்கு அழையுங்கள்
அனைத்து நாடுகளினதும் IDD கட்டணங்களை அறிய
#107# ற்கு அழையுங்கள்
Dialog
பொருத்தமான வரிகள் சேர்க்கப்படும்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

## 'வாழ்வின் வசந்தம்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டானும் அண்ணா கலை மன்றமும் இணைந்து நடத்தும் விரிவுரையாளர் விஸ்வமகாதேவன் எழுதிய "வாழ்வின் வசந்தம்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.05 மணிக்கு யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை அதிபர் க. சந்திரசேகரன், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் ஆலய குருமார்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை திருமதி நாச்சியார் செல்வநாயகமும் ஆற்ற நூல் ஆய்வுரையை சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்துவார்.

இந் நூலின் அணிந்துரையை பண்டிதர் ப.சாந்தகுமார் வழங்கவுள்ளார். (2-4)

## கசூரினா கடற்கரை வீதி திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கசூரினா கடற்கரை வீதி திறப்பு விழா பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரால் திறந்து வைக்கப்படவிருந்த விழாவே பிற்போடப்பட்டுள்ளது என வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் எந்திரி த.சிவராஜலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-4)




## பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகள் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

எனவே இப் பயிற்சியில் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (2-4)

# கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார இறுதிநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார இறுதிநாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி சாந்தி நிலையத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதிப.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

தொடர்ந்து வரவேற்புரையை இல்ல அத்தியட்சகர் என்.இராசலிங்கம் வழங்கவுள்ளதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(2-4)

# யாழ். முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

யாழ்.முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தின் முன்னேற்றம், தேவைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக அரச அதிபரின் அலுவலக மண்டபத்தில் யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா · சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான முன் ஆலோசனைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இல83, கலீப, அப்துல் காதர் வீதியில் அமைந்துள்ள மக்கள் பணிமனையில் நடைபெறவுள்ளது.

எனவே இதில் கலந்துகொள்ள விரும்பும் யாழ்.முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தில் அக்கறையுள்ள யாழ்.மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களின் நிர்வாகிகளின் பிரதிநிதிகள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள் மற்றும் சமூக அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டு தேவைகளை இனங்கண்டு கருத்துகளைத் தெரிவித்து தீர்மானம் எடுப் பதற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை உறுப்பினர் பி. ஏ.எஸ்.சுபியான் அறிவித்துள்ளார். (2-4)

# சைக்கிள் திருடன் மடக்கிப் பிடிப்பு

(நல்லூர்)

வீடொன்றினுள் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான துவிச்சக்கரவண்டியை திருடிச் சென்ற திருடன் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்.

இச் சம்பவம் நேற்று காலை10 மணிக்கு நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நல்லூர் நாவலர் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான துவிச்சக்கரவண்டியை இனந்தெரியாத இளைஞர் ஒருவன் வீட்டினுள் நுழைந்து திருடிச் சென்றுள்ளான்.

அப்போது வீட்டிலிருந்தவர்கள் கூக்குரலிடவே வீதியால் சென்ற பொதுமக்கள் திருடனை மடக்கிப் பிடித்துள்ளனர். (ச-2, 134)

## தேசிய கல்விக் கல்லூரி நியமன ஆசிரியர் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரியில் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி பெற்று யாழ்ப்பாண வலயத்தில் நியமனம் பெற்றவர்களிற்கு நியமன முறைகள் தொடர்பான ஆய்வுக்கான தகவல் சேகரிப்பு கலந்துரையாடல் யாழ்ப்பாண வலய முகாமைத்துவ மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். மேற்குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களை இக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (எ-2)

## புலமைப்பரிசில் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று இதுவரை கொடுப்பனவுகளை பெறு வதில் பிரச்சினைகள் உடைய மாணவர் களின் பெற்றோர்கள் அதிபரால் உறுதிப் படுத்தப் பட்ட ஆவணங்களுடன் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண கல்வி வலயத்தில் காலை 8.30 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் மத்திய கல்வி அமைச்சில் இருந்து வருகை தரும் அலுவலர்களுடன் கலந்துரையாடி கொடுப்பனவுகளை பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப் பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (எ-2)

## இசை நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் இசை நிகழ்வு ஒன்று பக்கவாத்திய சகிதம் நடைபெறவுள்ளது. (2-4-35)

✠✠✠

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழைம தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிபூசை முடிவுற்றதும் இசைமணி கலாபூஷணம் வ.செல்லத்துரை குழுவினரின் பக்கவாத்திய சகிதம் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (2-4-35)

## ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை சிரேஷ்ட மாணவத் தலைவன் செள. டிலக்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி சி.காங்கேயன் கலந்து சிறப்பிப்பதுடன் பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 12 ஆசிரியர்களுக்கான பிரிவுபசார விழாவும் இடம் பெறவுள்ளதாக யாழ்.நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய அதிபர் எம்.கஜேந்திரன் அறிவித்துள்ளார். (2-4)

## ஆங்கில மொழி மூல கணிதப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா/த) வகுப்பு மாணவர்களுக்கான அங்கிலமொழி மூல கணிதப் பரீட்சை இன்று வியாழக்கிழமை மதியம் ஒரு மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் பரீட்சை முடிவுற்றதும் விசேட வகுப்பு பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என யாழ்.வலய ஆசிரிய நிலைய முகாமையாளர் அறிவித்துள்ளார். (2-4)

## மாட்டுவண்டி சவாரி போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி கடந்த 3ஆம்திகதி நடைீபெறவிருந்த மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பண்டத்தரிப்பு விளான் சவாரித் திடலில் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி எஸ்.அனந்தசயனன் அறிவித்துள்ளார். (2-4)










யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர் தினவிழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள், ஆசிரியர்கள் அழைத்து வரப்படுவதையும் ஆசிரியர்கள் ஆசிரியகீதம் பாடுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பாடசாலை ஆசிரியருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இன்று ஒரு தகவல்

## தன்வினை தன்னைச்சுடும்

'ஸ்வயங் கிருத அபராதம்' என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

நாம் செய்யும் ஒரு தவறு நமக்கே இடைஞ்சலாக வந்து முடிவது தான் அது.

இதை விளக்குவதற்காக மாயூரம் வேதநாயகம் பிள்ளை வேடிக்கையாக ஒருகதை சொல்லியிருக்கிறார். அவர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலில் இது வருகிறது.

ஒரு கணவன்-மனைவி, இவர்கள் இரண்டு பேருக்குள்ளேயும் எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது சண்டை வந்து கொண்டே இருந்தது. ஒருவருக்கொருவர் திட்டிக் கொண்டே இருப்பார்கள்.

அப்படி ஒருநாள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அவன் அவளைப் பார்த்து, "உன்னைப் பழி வாங்குகிறேன் பார்" என்றான்.

"எப்படி பழிவாங்குவாய்?" என்று அவள் கேட்டாள்.

"கொல்லையில் ஒரு பெரிய ஆழமான குளம் இருக்கிறதல்லவா... அதிலே..." என்று ஆரம்பித்தான். "அதிலே...?" என்று அதட்டலாக கேட்டாள் அவள்.

"அதில் நான் போய் விழுந்து விடுவேன்" என்று முடித்தான் அவன். அப்படிச் சொல்லியும் இவள் விடவில்லை.

"நீ அந்தக் குளத்தில் விழுவதை நான் என் கண்ணால் பார்க்க வேண்டும். அந்தக் காரியத்தை இப்பொழுதே செய். வா." என்று சொல்லி அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

இவன் பலி ஆடு மாதிரி பின்னாடியே போய்க் கொண்டிருந்தான். குளம் வந்து விட்டது.

"இதோ இருக்கிறது நீ சொன்ன குளம். இதில் குதித்துவிடு" என்றாள் அவள். விடுவது மாதிரி தெரியவில்லை. இவன் குதிப்பதற்குத் தயாரானான்.

தூரமாகப் போய் நின்று அங்கிருந்து வேகமாக ஓடிவந்து அந்த ஆழமான குளத்தில் பொத்தென்று விழுந்து விட வேண்டும்.

அவன் தூரத்தில் போய் நின்றான். ஒரு விநாடி யோசித்தான். அதற்குப்பின் வேகமாக ஓடிவந்தான். குளத்தின் ஓரமாக வந்ததும் அப்படியே நின்று விட்டான். குதிக்கவில்லை. உடனே அவள் சும்மா இருப்பாளா?

"ஏன் குளத்தில் விழவில்லை?" என்று சத்தம் போட ஆரம்பித்தாள். இவன் மெதுவாக சொல்ல ஆரம்பித்தான்.

"அது வந்து... வேறொன்றுமில்லை. எனக்கு 'நீச்சல் தெரியும். அதனால் நான் குளத்தில் குதித்ததும் நீந்திக் கரைக்கு வந்தாலும் வந்து விடுவேன். நான் தப்பி வராத அளவுக்கு நீதான் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்" என்றான்.

"என்ன செய்ய வேண்டும்? சொல்" என்றாள்.

"என்னுடைய இரண்டு கைகளையும் நீ பின்னுக்கு சேர்த்துக் கட்டி விடு. அதன் பின் நான் நீந்த வேண்டும் என்று நினைத்தாலும் அது முடியாதே" என்றான்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று நினைத்து அதேமாதிரி அவனைக் குளத்து ஓரமாக நிற்க வைத்து கையிரண்டையும் பின்பக்கமாக சேர்த்துக் கட்டி விட்டாள்.

அந்த ஆள் குளத்து ஓரமாக நிற்க, அவள் தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்து அவனைத் தள்ளிவிட்டுவிட வேண்டும்.

இப்படியொரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவன் குளத்தின் ஓரமாக நின்று கொண்டிருந்தான். அவள் தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்தாள், அவனைப் பிடித்து தள்ளிவிடுவதற்காக!

அருகில் வந்ததும் திடீரென்று அவன் விலகிக் கொண்டான். ஓடி வந்த வேகத்தில் அவளால் திடீரென்று 'பிறேக்' போட முடியவில்லை.

நேராக ஓடி வந்து குளத்தில் விழுந்து விட்டாள். விழுந்ததும் தண்ணியில் கையையும் காலையும் அடித்துக் கொண்டு "ஆ... ஊ..." என்று கத்த ஆரம்பித்தாள்.

ஐயோ! என்னை வந்து கொஞ்சம் கைதூக்கி விடுங்களேன். கரையில் சேருங்களேன். காப்பாற்றுங்களேன் என்று கத்தினாள்.

கரையில் நின்று கொண்டிருந்த அந்த ஆள் மிகவும் நிதானமாகப் பேசினான். நான் என்ன செய்வது? உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று தான் நினைக்கிறேன்.

இருந்தாலும் அது முடியவில்லை. ஏனென்றால் நீயே தானே பின்பக்கமாக என்கையை கட்டிப் போட்டுவிட்டாய். இப்பொழுது நான் என்ன பண்ண முடியும்? என்று சொல்லி விட்டான். இதுதான் ஸ்வயங்கிருத அபராதம் என்பது. இந்தக்காலத்தில் கணவன் மனைவிக்குள் தகராறு என்றால் யாரும் குளத்தைத் தேடிக் கொண்டு போவதில்லை. நேராக நீதிமன்றத்தைத் தேடிக் கொண்டு போய் விடுகிறார்கள்.

ஒரு ஆசாமி அப்படித்தான் நீதிமன்றத்துக்குப் போனான். "என் சம்சாரத்துடன் குடும்பம் நடத்த முடியாது. விவாகரத்து வேண்டும் என்று மனுக் கொடுத்தான். விசாரணை வந்தது.

அரசாங்க சட்டத்தரணி கேட்கிறார்:

"உங்களுடைய மனைவி கோபக்காரரா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான் இவன்.

"ஊதாரித்தனமாக செலவு செய்கிறாரா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான்.

"நிறைய பொய் சொல்லுராரா?" என்றார்.

"இல்லை" என்றான்.

"உங்களை மதிப்பதில்லையா?" என்று கேட்டார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை" என்றான்.

"அப்படியிருக்கும் போது எதற்கு விவாகரத்து கேட்கிறீர்கள்?" என்று கேட்டார் அவர்.

"நீங்கள் கேட்ட அத்தனை குறைகளும் என்னிடம் இருக்கிறதே. அதனால்தான் கேட்கிறேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளி. மாவட்டத்தில் மீள்குடியமர்வு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்து தற்போது தற்காலிகமாக வெளி மாவட்டத்தில் வசித்து வரும் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து மீள்குடியமர்விற்காக கிளி/மத்திய கல்லூரி இடைத் தங்கல் முகாமிற்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வருகைதந்து காலை 9 மணி தொடக்கம் மதியம் 2 மணிவரை தங்களது மீளக் குடியமர்விற்கான பதிவுகளை மேற்கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (2)

## திருவிழா திருப்பலி

(சாவகச்சேரி)

கொடிகாமம் அல்லாரை தூய செபமாலை அன்னை ஆலய திருவிழா கடந்த முதலாம் திகதி பங்குத்தந்தை ம. பத்திநாதன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாட்கள் நடைபெற்றது.

இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு பருத்தித்துறை மறைக் கோட்ட் முதல்வர் அருட்பணி ஜோன் மவுலிஸ் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதாக ஆலயப் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (2)

## இலங்கைக்கான கல்ப் எயார் விமான சேவை மீண்டும் ஆரம்பம்

பிரபல்யம் பெற்ற மத்திய கிழக்கு விமான சேவையான கல்ப் எயார் நிறுவனம் மீண்டும் இலங்கைக்கான சேவையை ஆரம்பித்துள்ளது.

பயங்கரவாத அச்சம் காரணமாக நீண்ட நாள் இந்த விமான சேவை இலங்கைக்கான பயணத்தை இடைநிறுத்தியிருந்தது.

கல்ப் எயார் விமான சேவையின் யூ 320 விமானம் 150 பயணிகளுடன் நேற்று முன்தினம் இரவு 8.20 மணியளவில் பஹ்ரேனிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமான சேவையானது வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# லிபியா சென்ற இலங்கையர்கள் 151 பேர் கைவிடப்பட்ட நிலையில்!

தொழிலுக்காக லிபியாவுக்குச் சென்ற 151 இலங்கையர்கள் கைவிடப்பட்ட நிலையில் லிபியாவின் திரிபோலி நகரில் உள்ள முகாம் ஒன்றில் தங்கியுள்ளனர்.

அந்த நாட்டில் உள்ள கொரிய கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றுக்குத் தொழிலுக்காக சென்ற இலங்கைப்பணியாளர்களின் இலங்கைப் பணியாளர்களின் ஒரு பிரிவினரே இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் உடன்படிக்கை செய்து கொண்டதன் பிரகாரம் தமக்கான சம்பளத்தை வழங்கவில்லை எனப் பணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக லிபியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் சுதந்த கனேகம் ஆராச்சி இது தொடர்பாக குறிப்பிடுகையில் இந்தப் பணியாளர்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சுக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கும் அறிவித்துள்ள தாக அவர் தெரிவித்தார். (4-2)

# இராசி பலன்

*07.10.2010*
*(புரட்டாதி 21, வியாழக்கிழமை)*
*அமாவாசை பின்னிரவு 1.01 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 8.09 மணிவரை*
*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*
*சுபநேரம் 7.32- 9.02 மணிவரை*
*மகாளய பட்ச முடிவு , அமாவாசை விரதம்.*

**மேடம்** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள், சொத்து வாங்கும் எண்ணம் மேலோங்கும், விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும், விருந்தினர் வருகையுண்டு.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் நடைபெறும், தொழில் வளம் பெருக தொல்லை தருபவர்களே முன்வந்து உதவுவர், சகோதர ஒற்றுமை காணப்படும்.

**சிங்கம்** சிறப்பான நாள், பொருளாதார வளர்ச்சி கூடும், பொருள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், சுப செய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பெரியோர் உதவியால் சில காரியம் நிறைவேறலாம், வேலைப்பழு குறையும், உடல் நலம் சீராகும்.

**துலாம்** சுப விரயம் ஏற்படும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களை செய்யும் எண்ணம் உருவாகும், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு உண்டு.

**விருச்சிகம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், வீட்டுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர்கள் பகை அகலும்.

**தனுசு** வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும் நாள், செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களை பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையடைவீர்கள்.

**மகரம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், தொழிலை விரிவு படுத்த எதிர்பார்த்த உதவி கிடைக்கும், தேகநலனில் தெளிவு ஏற்படும் , பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்ட வில்லங்கம் விலகும்.

**கும்பம்** சிவாலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**மீனம்** வரவு திருப்தி தரும் நாள், செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டைப் பெறுவீர்கள், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, உடல்நலம் சீராகும்.

வளவன்

# வடமராட்சி பகுதியில் பெரும்போக நெற்செய்கை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் இவ்வருடம் பெரும் போக நெற்செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்கமைய கூடுதலான நிலப்பரப்பில் நெல் வேளாண்மை செய்யப்படவுள்ளதோடு கடந்த வருடங்களை விட இந்த ஆண்டு பெரும் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேலும் அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட நிலங்களிலும் மற்றும் தரிசு நிலங்களிலும் இவ் வேளாண்மை நடைபெறவுள்ளது.

தற்போது இப்பகுதி வாழ் மக்கள் நெல் விதைக்கும் நிலங்களை உழுது பண்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதோடு வடமராட்சியில் பெய்து வரும் பருவகால மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் நெற் செய்கைகளில் ஈடுபடுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (2-10)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 50 |
| தக்காளி | 40 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 50 | 60 | 70 |
| கரட் | 50 | 40 | 40 |
| பூசணி | 40 | 40 | 35 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 50-70 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 130 |
| போஞ்சி | 120 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 10-15 | 120 |
| தேசிக்காய் | 100 | 80 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-45 | 40 |

# பேர்சனல் கணனியின் இடத்தில் டேப்ளட் பி.சி.



(சென்றவாரத்தொடர்ச்சி)

தற்போது சந்தையில் கிடைக்கும் சில டேப்ளட் பி.சி.க்களை இங்கு காணலாம்.

◆ எக்ஸ்போ பி.சி. ( Expo PC)

அண்மையில் நடந்த பொருட்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இயங்கும் இதன் திரை 11.6 அங்குல குறுக்களவு கொண்டது. 1.5 வாட் ஸ்பீக்கர்கள், 1.3 மெகா வெப்கமரா, இரண்டு யு.எஸ்.பி. போர்ட்கள், எச்.டி.எம்.ஐ. அவுட்புட் ஆகியன உள்ளன. இதில் 32 ஜி.பி மற்றும் 64 ஜி.பி என இரு மொடல்கள் வர இருக்கின்றன.

◆ எச்.பி.ஸ்லேட், ( HP Slate )

கடந்த ஜனவரியில் லாஸ் வேகாஸ் கருத்தரங்கில் காட்டப்பட்டுப் பின் விற்பனைக்கு வந்தது. விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இயங்குகிறது. திரை 8.9 அங்குல அகலம் இரண்டு வெப்கமராக்கள் தரப்பட்டுள்ளன.

◆. தோஷிபா லிபரெட்டோ டபிள்யூ 100 (Toshiba Libretto W100 )

அண்மையில் அமெரிக்காவில் விற்பனைக்கு அறிமுகமானது. இதன் சிறப்பம்சம் இதில் இரண்டு திரைகள் இருப்பது. இரண்டிலும் விர்ச்சுவல் கீ போர்டு வைத்து டைப் செய்திடலாம். இது ஏறத்தாழ ஒரு மொபைல் கணனியாகும்.

◆ டெல் ஸ்ட்ரீக் ( Dell Streak )

இதனை ஸ்லேட் ஸ்மார்ட்போன் எனவும் அழைக்கின்றனர். ஜீன்ஸின் பொக்கெட்டுக்களில் வைத்து எடுத்துச் செல்லலாம். ஐந்து அங்குல மல்டி டச் ஸ்கிரின் திரை தரப்பட்டுள்ளது. ஆண்ட்ராய்ட் சிஸ்டத்தில் இயங்குகிறது. இரண்டு கமராக்கள் உண்டு.

◆ வி டேப் ( We Tab )

தொடக்கத்தில் இது We Pad என அழைக்கப்பட்டது. எதற்காகப் பெயர் மாற்றம் செய்தனர் என்று தெரியவில்லை. லினக்ஸ் சிஸ்டத்தில் இயங்கும் டேப்ளட் பி,சி, ஜெர்மனி நாட்டில் தயாரிக்கப்பட்டு பிற நாடுகளில் விற்பனை செய்யப்படுகிறது.

◆ நேஷன் இங்க் ஆடம் (Nation Ink Adam)

இந்தப் பெயரில் இரண்டு மொடல்கள் வெளி வந்தன. இரண்டிலும் 10.1 டி.எப்.டி. திரைகள் உள்ளன. 2யு.எஸ்.பி.போர்ட், எச்.டி.எம்.ஐ. போர்ட், மைக்ரோ எஸ்.டி.கார்ட் மற்றும் சிம் கார்ட் ஸ்லாட்கள் தரப்பட்டுள்ளன. டிரேக் பேட் மற்றும் 3.2 மெகா பிக்ஸெல் வெப் கமராக்கள் தரப்பட்டுள்ளன.

◆ சாம்சங் காலக்ஸி டேப் (Samsung Ga laxy TAB)

அண்மையில் பெர்லின் நகரில் நடந்த கருத்தரங்கத்தில் இது வெளியிடப்பட்டது. டேப்ளட் பிசிக்களில் SWYPE (விரல்களைத் தூக்காமல் டைப் செய்திட வழி தரும் தொழில் நுட்பம்) என்ற தொழில் நுட்பத்தினை அறிமுகப் படுத்திய முதல் டேப்ளட் பி.சி. இது தான். இரண்டு வெப் கேமராக்கள் இணைக்கப்பட்டுள்ளன. அண்மையில் பிரபலமாகி வரும் ஆண்ட்ராய்ட் சிஸ்டத்தில் இது இயங்குகிறது.

## அனுப்பிய இமெயிலை தடுப்பதற்கு?

ஜிமெயிலில் இமெயில் பயன்படுத்துபவர்கள் மெயில் ஒன்றைத் தயாரித்து செண்ட் பட்டனை அழுத்திய பின்னர் உடனே அதனை அனுப்புவதைத் இரத்து செய்திட முடியும். மெயில் செய்தியில் தவறு இருப்பதை உணர்ந்து திருத்த விரும்புபவர்கள் கோபத்தில் மெயில் எழுதி அனுப்பிய அந்த நேரத்திலேயே முடிவை மாற்றிக் கொள்பவர்களுக்கு இந்த வசதி மிகவும் உதவுகிறது.

செண்ட் பட்டனை அழுத்திய பின்னர் 5 விநாடிகளில் அதற்கான அன்டூ undo பட்டனை அழுத்த வேண்டும் .ஏனென்றால் ஜிமெயில் 5 விநாடிகள் கழித்தே மெயிலை அனுப்பும் வேலையைத் தொடங்குகிறது. இரத்துச் செய்யத் தரப்படும் இந்த நேரம் மிகவும் குறைவாக இருப்பதாகப் பலர் தெரிவித்ததனால் ஜிமெயில் இந்த கால அவகாசத்தினை அதிகமாக்கியுள்ளது. 30 விநாடிகள் வரை மெயில் அனுப்புவதை இரத்து செய்திடும் வசதியைத் தந்துள்ளது. 30 விநாடிகள் ஏன்? என்று நீங்கள் எண்ணினால் இதனைக் குறைத்துக் கொள்ளலாம். 5, 10, 20, 30 நொடிகள் என கால அவகாசத்தை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் இதனை அமைத்திட Gmail> Setting> General>Undo Send என்று சென்று மாற்றவும்.

## விண்டோஸ் கீ+ ஷோர்ட் கட்

கீபோர்ட்டில் இடது புறமாகக் கீழ் வரிசையில் கொண்ட்ரோல் மற்றும் ஓல்ட் பட்டன்களுக்கிடையில் உள்ளது விண்டோஸ் லோகோ கீ.இதனை வேறு சில கீகளுடன் அழுத்துகையில் நம்மால் சில செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். விண்டோஸ் கீ மற்ற கீகளுடன் இணைக்கும் போது ஏற்படும் செயற்பாடுகள்

win key: தனியே அழுத்துகையில் ஸ்டார்ட் மெனு தோன்றும்,மறையும்

Win key+ M: அனைத்து விண்டோக்களும் மினிமைஸ் செய்யப்படும்

Win key+Shift+ M: மினிமைஸ் செய்த விண்டோக்கள் அனைத்தும் திறக்கப்படும்.

Win key+D: திறந்திருக்கும் புரோகிராம்கள் அனைத்தையும் மினிமைஸ் செய்திடும். அடுத்து அழுத்துகையில் மினிமைஸ் செய்யப்பட்ட புரோகிராம்களை காட்டும்.

Win key+Tab: டாஸ்க் பாரில் உள்ளவற்றை சுழற்றிக் காட்டும்

Win key+E:மை கொம்பியூட்டர் திறக்கப்படும்.

Win key+F: பைல் அல்லது போல்டர் தேடப்படும்.

Win key+F1:விண்டோஸ் ஹெல்ப் விண்டோ கிடைக்கும்.

Win key+L:விண்டோஸ் கீபோர்ட் லொக் ஆகும்.

Win key+Break:சிஸ்டம் புராபர்ட்டீஸ் டயலொக் பொக்ஸ் கிடைக்கும்.

Win key+R:Start menu வில் கிடைக்கும் Run box

Win key+F:Start menu வில் கிடைக்கும் Find window

Win key+E:Explorer தொகுப்பு திறக்கப்படும்

Win key+Pause/Break:System Properties திறக்கப்படும்.

## கணனி சாவியாக யு.எஸ்.பி. ஸ்டிக்

நீங்கள் பணியாற்றும் சூழ்நிலை மிகவும் கும்பலான இடமாக இருந்து, உங்கள் கணனி வேறு யாரேனும் உட்புகுந்து இயக்கிவிடுவார்கள் என்று அஞ்சுகிறீர்களா? கணனியை எப்படி பூட்டிச் செல்வது லொக் ஓப் செய்திடாமல் எப்படி இதனைப் பாதுகாப்பாக வைப்பது? என்ற கேள்விகளுக்குப் பதிலாக பிரிடேட்டர் (Predator) என்னும் புரோகிராம் தரப்பட்டுள்ளது.

இதனை ஒரு யு.எஸ்.பி. ஸ்டிக்கில் பதிந்து வைத்து, அந்த ஸ்டிக்கை உங்கள் கணனிக்கான சாவியாகப் பயன்படுத்தலாம். இதனை எப்படி செயல்படுத்துவது எனப் பார்க்கலாம்.

http://www.montpellieri nformatique.com/predatator/en/index.php? n=Main.DownloadFree என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து பிரிடேட்டர் புரோகிராமின் ஸிப் பைலை டவுண்லோட் செய்துகொள்ளுங்கள். (தொடரும்)




## கணனிக்கு புதியவரா நீங்கள்? இணையத்தளத்தில் ஐ.பி.முகவரி



ஒரு கணனி மற்றொரு கணனியுடன் தொடர்புகொண்டு தகவல் பரிமாற அந்தக் கணனி ஐ.பி.முகவரி தெரிந்திருக்க வேண்டும். இந்த ஐ.பி. முகவரியானது எண்களால் ஆனது 32 பிட் கொண்ட ஐபி முகவரியை எட்டு எட்டு பிட்டுகளாகப் பிரிப்பார்கள். ஒவ்வொரு 8 பிட்டையும் Actet என ஆங்கிலத்தில் அழைப்பார்கள்.

ஆக்டெட்டின் மதிப்பு 0 முதல் 255க்குள் ஒரு எண்ணாக இருக்கும்.

எடுத்துக் காட்டாகக் கூறவேண்டுமானால் 167.213.40.158 என்பது ஒரு ஐ.பி. முகவரி. இதில் நான்கு பகுதிகள் உள்ளன. ஒரு பகுதியும் அடுத்த பகுதியும் முற்றுப் புள்ளியால் பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு பகுதி என்பது ஒரு ஆக்டெட் என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் எண்ணா? பெயரா?

உங்கள் நண்பர்களுக்குள் 23456789 என்ற தொலைபேசியை வைத்திருப்பது யார் என்று கேட்டால் சற்று நேரம் விழிப்பீர்கள். அதேநேரத்தில் நண்பர் இராமசாமியைத் தெரியுமா என்று கேட்டால் உடனே அவரை நினைவிற்குக் கொண்டு வந்து விடுவீர்கள். இதற்குக் காரணம் எண்களை நினைவில் வைப்பதைக் காட்டிலும் பெயரை நினைவில் வைப்பது எளிது.இது மனித இயல்பு.

இன்டர்நெட் மூலமாக ஏராளமான கணனிகளைத் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு உள்ளது.ஒவ்வொரு கணனியின் ஐ.பி. முகவரியையும் அதன் எண் களில் நினைவில் வைத்திருப்பது என்பது மிகவும் கடினமான ஒரு செயலாகும்.

ஒவ்வொரு கணனிக்கும் டொமைன் நேம் என்ற பெயரால் ஆன முகவரியைக் கொடுக்கலாம் என கணனி அறிஞர்கள் ஒரு கட்டத்தில் முடிவெடுத்து செயற்படுத்தினர்.

எடுத்துக்காட்டாக www.yahoo.com என்பது யாஹூ இணையத்தளத்தின் பெயராகும். இதனை நினைவில்கொள்வதும்எளிது. இன்டர்நெட்டில் இணைந்துள்ள ஒவ்வொரு கணனிக்கும் ஐ.பி. முகவரி உண்டு. பெரும்பாலான கணனிகளுக்கு குறிப்பாக சேர்வர்களுக்கு டொமைன் பெயர்களும் உண்டு.

### டொமைன் நேம் சிஸ்டம்

நீங்கள் ஒரு கணனியுடன் தொடர்புகொள்ள விரும்பினால் அதன் ஐ.பி. முகவரியைப் பயன்படுத்தலாம் அல்லது அதன் டொமைன் பெயரைப் பயன்படுத்தலாம்.ஆனால் கணனிகளுக்குத் தேவையானது ஐ.பி. முகவரிகள் மட்டுமே. நமது வசதிக்காக நாம் டொமைன் பெயர்களைப் பயன்படுத்துகிறோம்.

இந்த டொமைன் பெயர்களுக்கான ஐ.பி. முகவரி என்ன என்பதனை முதலில் உங்கள் கணனி கண்டுபிடித்து பின்பு அந்த ஐ.பி. முகவரியைப் பயன்படுத்திக் கொள்கிறது. நீங்கள் தொடர்பு கொள்ள விரும்புகிற கணனியின் ஐ.பி. முகவரி 123.45.67.89 என வைத்துக்கொள்வோம். அந்த கணனிக்கான டொமைன் பெயர் www.abc.com எனவும் வைத்துக் கொள்ளலாம்.


இன்டர்நெட்டில் நுழைந்தவுடன் நீங்கள் உங்கள் கணனியில் பிரவுசர் சொப்ட்வேரைத் திறந்து அதன் முகவரிப் பகுதியில் 123. 45. 67. 89 என டைப் செய்த உடனேயே அந்தக் கணனியில் நுழைந்து விடுவீர்கள். காரணம் நீங்கள் ஐ.பி. முகவரியைப் பயன்படுத்தியுள்ளீர்கள். கணனிக்கு ஐ.பி. முகவரியை நேராகக் கையாளத் தெரியும். ஐ.பி.முகவரிக்குப் பதிலாக அந்தக் கணனியின் டொமைன் பெயரான www.abc.comஎன்பதை டைப் செய்கிறீர் கள் என வைத்துக்கொள்வோம். கணனிக்குத் தேவை ஐ.பி.முகவரிதான். டொமைன் பெயர் அல்ல். எனவே உங்கள் கணனி நீங்கள் டைப் செய்துள்ள www.abc.com என்ற டொமைன் பெயரைக் கொண்ட தளத்தின் ஐ.பி.முகவரியை கண்டுபிடிக்க முயலும்.

இதற்கான Domine Name Server -DNS என்ற சேர்வரைத் தொடர்பு கொள்ளும். அந்த டொமைன் பெயருக்கு உரித்தான ஐ.பி. முகவரியை டி.என்.எஸ் சேர்வர் கண்டு பிடித்து கணனிக்கு வழங்கும். அந்த ஐ.பி.முகவரியைப் பயன்படுத்தி உங்கள் கணனி அந்த கணனியுடன் தொடர்பு கொள்ளும்.

பிரவுசரில் நேரடியாக எண்களால் ஆன ஐ.பி. முகவரியை டைப் செய்தால் உடனடியாக உங்கள் கணனி அந்த எண்ணுக்கான கணனியை தொடர்பு கொண்டு இணைப்பை ஏற்படுத்தும். ஏதோ காரணத்தால் டொமைன் நேம் சேர்வர் இயங்காமல் போனால் டொமைன் நேம் கொடுத்தால் உங்களுக்கு இணைப்பு கிடைக்காது.

எனவே உங்களுக்கு அத்தியாவசியமாக அடிக்கடி தொடர்பு கொண்டே ஆக வேண்டும் என்கிற இணைய சர்வர்களின் எண்களையும் எங்காவது குறித்து வைத்துக் கொள்வதும் நல்லது.

# கைதிகளின் ஆடை அணிந்து கதறுகிறார் பொன்சேகா!




யுத்த நெறிகளை புறம் தள்ளிவிட்டு ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, தற்போது அலுமினிய தட்டுடன் சிறைக் கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கிறார். உடலும் மனதும் களைப்படைந்து போய், கடந்த கால சம்பவங்களை நினைத்து விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கிறார்.

இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த சரத்பொன்சேகா, போரின் வெற்றி யாருக்கு சொந்தம் என்கிற பஞ்சாயத்தில் ராஜபக்ஷ சகோதரர்களிடம் மல்லுக்கட்டினார். இந்த மல்லுக்கட்டில் இருதரப்பும் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசினர். இதனால் ராஜபக்ஷவும் பொன்சேகாவும் எதிரிகளானார்கள். போருக்குப் பின்பு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷவை எதிர்த்து களமிறங்கிய பொன்சேகா, தேர்தலில் தோல்வி அடைந்தார். வெற்றி பெற்று ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றதும்...முதல் வேலையாக பொன்


கோத்தபாய ராஜபக்ஷ

சேகாவை கைது செய்தார் ராஜபக்ஷ. இராணுவத்திற்கு ஆயுதங் களைக் கொள்முதல் செய்ததில் பொன்சேகா ஊழல் செய்தார் என்கிற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின்படி இராணுவ சிறையில் அடைக்கப்பட்டார் பொன்சேகா. இந்த வாழ்க்கை சுமார் 1 வருடமாக விசாரித்து வந்த இராணுவத்தின் இரண்டாம் நிலை நீதிமன்றம், "பொன்சேகா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதால் அவருக்கு 3 வருட கடும் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது" என்று சமீபத்தில் தீர்ப்பு வழங்கியது.

"இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பதால் அதனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன்படி ராஜபக்ஷவின் பார்வைக்கு தீர்ப்பினை அனுப்பி வைத்தது நீதிமன்றம். அப்போது அமெரிக்காவில் ராஜபக்ஷ இருந்ததால் இந்தத் தீர்ப்பு குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அமெரிக்காவிலிருந்து கடந்த 30 ஆம் திகதி இலங்கை திரும்பியதும், பொன்சேகாவிற்கு கொடுக்கப்பட்ட தீர்ப்பு விபரத்தை அன்று இரவு ஆராய்ந்த மஹிந்த, இராணுவ நீதிமன்றம் தந்துள்ள 3 வருட சிறைத்தண்டனையை இரண்

## ஆயுதங்கள் ஏந்திய கரங்களில் அலுமினியத் தட்டும் ஒரு டம்ளரும்

டரை வருடமாக (30 மாதங்கள்) குறைத்து ஒப்புதல் அளித்தார். பொன் சேகாவிற்கு நீதிமன்றம் தந்த சிறைத் தண்டனையை ராஜபக்ஷ ஏற்று ஒப்புதல் அளித்ததால் இராணுவ சிறையிலிருந்து கொழும்பில் உள்ள வெலிக்கடை சிறைக்கு மாற்றப்பட்டார் பொன்சேகா" என்கிறது ஜனாதிபதி மாளிகை.

**ஜனாதிபதியின் உத்தரவு**

வெலிக்கடை சிறைக்கு பொன்சேகா கொண்டு செல்லப்பட்டதும் வெள்ளை நிறத்தில் அவர் அணிந் திருந்த தேசிய ஆடையை அகற்றி விட்டு கைதிகளுக்கான ஆடை கொடுக்கப் பட்டது. அந்த ஆடை மிகவும் லூசாக தொள தொளவென்று இருந்ததால் அதனை அணிய பொன்சேகா மறுக்க, "இதனைத் தான் நீ போட்டுக் கொள்ள வேண்டும். மறுத்தால்... தையல்காரன் வந்து அளவு எடுத்து சரியான ஆடையை தைத்துக் கொண்டு வரும் வரை அரை நிர்வாணமாகத் தான் இருக்கவேண்டும். தேசிய ஆடையுடன் சிறையில் இருக்க அனுமதிக்க முடியாது. இது ஜனாதிபதியின் உத்தரவு" என்று ஒருமையில் அதட்டினார் சிறைக்காவலர். தன் நிலையை நினைத்து நொந்தவாறு அந்த ஆடையை வாங்கிக்கொண்டார் பொன்சேகா. அவருக்கு 0/22032 எண் கொண்ட கைதி எண்ணை ஆடையில் குத்தி விட்டுப் போனார் சிறைக் காவலர்.

" சிறையில் எஸ் பிரிவில் அடைக்கப்பட்டுள்ளார் பொன்சேகா. இது ஒரு தனிமைச் சிறை. ஜெயர்வத்தன ஜனாதிபதியாக இருந்தபோது, தீவிர வாதிகளுடன் தொடர்பு இருந்ததாக கைதுசெய்யப்பட்ட விஜயதுங்க அடைக்கப்பட்ட அதே அறைதான் பொன்சேகாவிற்கு தற்போது ஒதுக்கப் பட்டுள்ளது" என்று சிறைத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதலாம் திகதி இரவு அடைக்கப் பட்ட பொன்சேகா, தூக்கம் இன்றி தவித்தார். மின் விசிறிகள் எதுவும் அந்த அறையில் இல்லை. நூற்றுக் கணக்கான எறும்புகள் அந்த அறையில் குடியிருந்தன. காற்று வசதி இல்லாமலும் எறும்புகளின் கடியிலும் இரவு முழுக்க அவஸ்தைப்பட்டார். விடியற் காலை 5 மணிக்கு எல்லாக் கைதிகளையும் எழுப்புவது போல பொன்சேகாவையும் எழுப்பவந்தார் சிறைப் பணியாளர். அதனால் அவர் கொட்ட கொட்ட விழித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து " எழுந்திட்டீர்களா?" என்று மட்டும் சொல்லிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து போனார்.

**நக்கீரன்**

அந்த அறையில் இருந்த கழிவறையைப் பயன்படுத்த அவர் நினைத்த போது அதில் தண்ணீர் வரவில்லை. அப்போது அங்கு வந்த காவலரிடம் இதனை அவர் சொன்னபோது, ஒரு அலுமினியி ஜக்கை கொடுத்து "அதோ அங்கிருக்கிற தொட்டியில் தண்ணீ இருக்கு. அதிலிருந்து தண்ணீயை எடுத்து பொது கழிவறையை யூஸ் பண்ணிக்கோங்க"

தன் கணவரின் ஆடையைக் காட்டும் அனோமா



என்று அவர் சொல்ல , அதே போல ஜக்கில் தண்ணீர் எடுத்துக்கொண்டு போனார் பொன்சேகா. பிறகு மற்ற கைதிகளைப் போலவே வரிசையில் நின்று குளித்தார். குளித்துவிட்டு வந்த பொன்சேகாவின் கையில் ஒரு அலுமினியத் தட்டும் ஒரு டம்ளரும் கொடுக்கப்பட்டது. அந்த அலுமினிய தட்டை ஏந்தியவாறு வரிசையில் நின்று சோறு வாங்கிச் சாப்பிட்டார். 10 மணிக்கு வந்த தையற்காரன் அவருக்குச் சரியான ஆடை தைக்க அளவு எடுத்துக் கொண்டு போனார்.

முதல் நாளில் அவருக்கு எந்த வேலையும் கொடுக்கவில்லை. காலை போலவே மதியமும் இரவும் வரிசையில் நின்று சோறு வாங்கிச் சாப்பிட்டார். மாலை 6 மணிக்கெல்லாம் அறைக்குள் போகச் சொல்லி அவரை


மஹிந்த ராஜபக்ஷ

பூட்டினர். பகலில் மற்ற கைதிகள் யாரிடமும் பொன்சேகாவை பேச அனுமதிக்கவில்லை சிறை நிர்வாகம். முதல் நாளைப் போலவே இரண்டாவது இரவிலும் அவஸ்தைப்பட்டார் பொன்சேகா. சிறையில் சொகுசாக பொன்சேகா இருக்கக்கூடாது. அதனால் அச்சகத்தில் பணிபுரியும் வே.லையைக் கொடுக்கலாமா அல்லது தோட்டத்தை பராமரிக்கும் வேலையைக் கொடுக்கலாமா என்று 4ஆம் திகதிவரை சிறை நிர்வாகம் ஆலோசித்து கொண்டிருந்தது.

**அழுதார் பொன்சேகா**

வெலிக்கடை சிறைக்குள் வந்ததிலிருந்து யாரிடமும் பேசுவதற்கு அவர் முயற்சிக்கவில்லை. நிறைய நேரம் அழுதுகொண்டே இருந்தார். ஒரு முறை தனது அறையின் கம்பிகளை பிடித்துக்கொண்டு கதறினார் பொன்சேகா.

இவரை சிறைக்குள் கொண்டு வருவதற்கு முதல்நாள் வரை அந்த அறையில் இரண்டு மின்விசிறிகள் இருந்தன. திடீரென்று அதனை அகற்றிவிட்டனர். ஏன் என்று கைதிகள் சிலர் காவலரைக் கேட்க, " இந்த அறையில்தான் நாளை இரவு பொன்சேகா அடைக்கப்பட விருக்கிறார். மின் விசிறிகளை அகற்றச் சொல்லி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்று சொன்னார் காவலர்" என்கின்றன சிறையிலிருந்து கிடைக்கும் தகவல்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க...)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழா -2010



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பட்டமளிப்பு நிகழ்வில் வேந்தர், துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க அழைத்துச் செல்லப்படுவதை மேலுள்ள படங்களிலும், யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சிவசூரிய, துணைவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை அடுத்துள்ள படங்களிலும் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எம்.கணேசரத்தினத்துக்கு கெளரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களை மற்றைய படங்களிலும் காணலாம்.

# பாரியளவு பண மோசடியில் ஈடுபடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்!

## உயர்கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கடமையாற்றி வரும் சில விரிவுரையாளர்கள் பாரியளவு மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கல்வி சார் மற்றும் கல்விசாரா பணியாளர்களினால் இவ்வாறான மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய ஆறு விரிவுரையாளர்கள் கடமைக்குச் சமூகமளிக்காமல் நீண்ட காலம் ஊதி யம் பெற்று வருகின்றனர்.

ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பீடு செய்யும் போது பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்காக அதி களவு பணம் செலவிடப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்த விடயங்கள் குறித்து மாணவர்கள் எவ்வித முறைப்பாடுகளையும் இதுவரையில் வெளியிடவில்லை. பல்கலைக்கழகங்களை மாணவர்களே கட்டுப்படுத்தி வருகின்றனர். விரிவுரையாளர்கள் எவ்வித கட்டுப்பாடுகளை யும் விதிப்பதில்லை மாணவர்களின் சுதந் திரத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர் ஒன்றிய நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படமாட்டது பல்கலைக்கழகங்களுக்குள் அரசியல் சர்வாதிகாரம் தலைதூக்குவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜே.வி.பி. மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்துவதற்கு முனைப்பு காட்டியுள்ளதாகவும் ஜே.வி.பியின் சில மாணவர் அமைப்புக்கள் பல்கலைக்கழகங்களின் விடுதிகளை பலவந்தமான முறையில் கட்டுப்படுத்தி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(எ-4-2)

## காதில் கிசுகிசுக்கும் நகை சீன மா்ணவர் தயாரிப்பு

எதைச் சொன்னால் உங்கள் காதலி , மனைவி குஜால் ஆவாரோ அதை தயங்கியபடி இனி காதில் கிசுகிசுக்கத்தேவையில்லை. அந்த வேலையை நகை செய்யும். அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பிட்ஸ்பெர்க் நகரில் கார்நேகி மெலான் பல்கலைக்கழகம் உள்ளது. அந்த உரையாடல் தொழில்நுட்பப் பாடசாலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர் செங்சூ ஆவான் . இவர் ஒரு புதிய காதணியை தயாரித்துள்ளார். அதில் கடுகளவுக்கு மைக்ரோ போன் இருப்பதோடு ,அதன் உடன் இணைந்த ஸ்பீக்கர் ஒன்றும் உள்ளது. ஆனால் நகை போலவே தெரியும்.

மைக்ரோபோனில் பேசி பதிவு செய்து விட்டால்,சங்கேத குறியீடுகளாக பதிவாகும். பின் நகையுடன் இணைந்த வயர்களில் ஏற்படும் அதிர்வுகள் காரணமாக சங்கேத குறியீடுகள் குரலாக மெல்லிய சத்தத்தில் ஒலிக்கும். அது காதலில் இரகசியம் பேசுவது போலவே இருக்கும். இது பற்றி செங்சூ கூறுகையில்,இது டிஜிட்டல் உலகம் அதைப் பயன்படுத்தி தனிக் கருவி ஏதுமின்றி நகையையே பேச வைத்தால் என்ன என்று ஆராய்ந் தேன். அதில் வெற்றி கிடைத்தது என்றார். (எ-4-2)

# புத்தர் சிலையைத் திருடிய பௌத்த பிக்கு கைது !

(கொழும்பு)

புத்தர் சிலையை திருடிய பௌத்த பிக்கு உள்ளிட்ட மூவருக்கு 4 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலி ஸ்ரீபரமானந்த விகாரையில் காணப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட புத்தர் சிலை ஒன்றே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு வருட கால ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவம் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் சிலையை உருக்குலைத்த இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ச-2)

# யாழ்.மாநகரசபைக்குட்பட்ட

## வாகன ஆசனப்பதிவு முகவர்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களுக்கான பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் பேருந்துகளுக்காக ஆசணப் பதிவுகளை மேற்கொள்ளும் முகவர்களை யாழ். மாநகர சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாநகர சபையில் விநியோகிக்கப்படும் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மாநகரசபையின் அனுமதியைப் பெறாத முகவர்கள் வாகனப் பதிவுகளை மேற்கொள்ள அனுமதிக் கப்படமாட்டார்கள் என யாழ். மாநகரசபை முதல்வர் அறிவித்துள்ளார். (ஏ)

## கட்டட வேலைகளில் ஈடுபட்ட ஊழியர்கள் தவறி விழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் மாடிக் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த இரண்டு ஊழியர்கள் தவறி விழுந்ததில் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்வபம் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

இதில் புன்னாலைக் கட்டுவன் பிரதேசத்தைச் சேர்ந்த எம்.கனிஷ்டன்(வயது22) மற்றும் குருநால் பிரதேசத்தைச் சேர்ந்த கமிலா பெணாந்தோ (வயது-30) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிக்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2-6)

## மாணவர்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2009ஆம் ஆண்டு பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய க.பொ.த. (சா/த) பரீட்சை மற்றும் கணித பாட விசேட பரீட்சை ஆகியவற்றுக்கு தோற்றிய இடம் பெயர்ந்த மாணவர்களில் இதுவரை பரீட்சை பெறுபேறுகளை பெறாத மாணவர்களின் விபரங்கள் பரீட்சை ஆணையாளரினால் கோரப்பட்டுள்ளது.

எனவே இதுவரை பரீட்சை பெறுபேறுகள் கிடைக்காத மேற்குறிப்பிட்ட மாணவர்கள் உடனடியாக தங்கள் விபரங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வலிகாம வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு. சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

Purview of JOBSNET
Ministry of Labour Relations and Productivity Promotion

20 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Sep 2010 to Feb 2011

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம் மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.10.2010

# கண்ணிவெடி அகற்றும் தொழிலில் விதவைப்பெண்கள் ஈடுபாடு !

## ஏ.எப்.பி. செய்தி வெளியீடு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் மிகவும் ஆபத்தான தொழில்களை தெரிவு செய்து வருவதாக ஏ.எப்.பி.செய்தி சேவை தெரிவித்துள்ளது.

இதன்படி அங்குள்ள பெரும்பாலான விதவை கள் நிலக்கண்ணி வெடியகற்றல் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. அவர்கள் மாதம் ஒன் றுக்கு 200 டொலர்களை வருமான மாக ஈட்டுவதாக ஏ. எப். பி.குறிப்பிட் டுள்ளது.

மிகவும் அபாயகரமான தொழில் என தெரிந்திருந்தும் வருமானமின்மை மற்றும் வறுமை காரணங் களுக்காக அவர்கள் இந்த தொழில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படு கிறது.

தமது கணவரும் தாயும் 2007ஆம் ஆண்டு யுத்தத்தில் கொல்லப்பட்டதாகவும் கண்ணி வெடியகற்றல் பணியை பொறுத்த வரையில் தமது கிராமத்தில் சிறந்த வருமானம் மிகக் தொழில் என பெண் ஒருவர் கூறினார்.

தாம் ஒரு வருடத்திற்கு முன்னர் கண்ணிவெடியகற்றும் சுவிஸ் நிறுவனம் ஒன்றில் சேர்ந்ததாக குறிப்பிட்டுள்ள அவர் ஒரு கண்ணி வெடியை அகற்றுவதன் மூலம் 10 பேரின் உயிர்களை தாம் காப்பாற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரினால் வடக்கு -கிழக்கில் 90 ஆயிரம் பெண்கள் தமது கணவர்மாரை இழந்துள்ளார்கள். அதிலும் பலர் இளம் வயதிலேயே கணவர்மாரை இழந்துள்ளார்கள்.

இந்தநிலையில் அவர்கள் தமது கணவர்மார் மேற்கொண்டு வந்த விவசாயம், மீன்பிடி மற்றும் ஏனைய தொழில்களை மேற் கொண்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஏ-2)

# 07.10.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1690 - ஆங்கிலேயர் கியூபெக் நகரைத் தாக்கினர்.
- 1769 - ஆங்கிலேய நாடுகாண் பயணி கப்டன் ஜேம்ஸ் குக் நியூசிலாந்தைக் கண்டுபிடித்தான்.
- 1806 - ஆங்கிலேயர் ரால்ஃப் வெட்ஜ்வூட் என்பவரால் கார்பன் தாள் காப்புரிமம் பெறப்பட்டது.
- 1840 - இரண்டாம் வில்லியம் நெதர்லாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1874 - யாழ்ப்பாணத்துக்கான தந்தி இணைப்பு அநுராதபுரம் வரையில் நீடிக்கப்பட்டது.
- 1919 - நெதர்லாந்தின் கே.எல்.எம் என்ற விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி ருமேனியாவைத் தாக்கியது.
- 1942 - அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஐக்கிய நாடுகள் அவையை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தன.
- 1943 - இரண்டாம் உலகப் போரில் வேக் தீவில் கைப்பற்றிய அமெரிக்கக் கைதிகள் 100பேரை ஜப்பான் கொன்றது.
- 1944 - இரண்டாம் உலகப் போரில் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் யூதக் கைதிகளின் கிளர்ச்சி இடம் பெற்றது.
- 1949 - ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு உருவாக்கப்பட்டது.
- 1950 - சீனா திபெத்து மீதான தாக்குதலை ஆரம்பித்தது.
- 1951 - மலேயத் தீவிரவாதிகள் பிரித்தானிய தூதுவர் சேர் ஹென்றி கேர்னி என்பவரைக் கொன்றனர்.
- 1951 - இஸ்ரேலிய அரசு டேவிட் பென் - கூரியன் என்பவரால் அமைக்கப் பட்டது.
- 1958 - பாகிஸ்தான் அதிபர் இஸ்காண்டர் மிர்சா ஜெனரல் அயூப் கான் ஆதரவுடன் 1956 அரசமைப்பை நிராகரித்து இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்தார்.
- 1959 - சோவியத் விண்கலம் லூனா 3 சந்திரனின் அதி தூரத்தியப் புகைப்படங்களை பூமிக்கு அனுப்பியது.
- 1962 - சோவியத் ஒன்றியம் நோவயா சிம்லியா என்ற இடத்தில் அணுக்கரு சோதனையை நிகழ்த்தியது.
- 1963 - ஹெயிட்டி மற்றும் டொமினிக்கன் குடியரசு ஆகியவற்றை சூறாவளி ஃபுளோரா தாக்கியதில் 7ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மூன்று முறை விமானத்தாக்குதல் நடத்தியது. வலிமையான கொங் கிரீட் கட்டிடங்களையும் ஊடுருவி தாக்கும் டொமஹாக் ரக ஏவுகணைகளை ஏவியது.
- 2004 - கம்போடியாவின நோரொடொம் சிஹானூக் மன்னர் பதவியில் இருந்து விலகினார்.

## பிறப்புகள்

- 1931 - டெஸ்மண்ட் டுட்டு, தென்னாபிரிக்க ஆயர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1952 - விளாடிமிர் புடின், ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி.
- 1978 - சகீர் கான், இந்திய வேகபந்து வீச்சாளர்.
- 1979 - நரேன், தென்னிந்தியத் திரைப் பட நடிகர்.

## இறப்புகள்

- 1708 - குரு கோவிந்த் சிங், சீக்கிய குரு (பி. 1666)
- 1967 - நோர்மன் ஏஞ்செல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1872)
- 1974 - சி.மு.இராசமாணிக்கம், முன்னாள் இலங்கைத் தமிழரசுக் கட்சி பட்டிருப்புபாராளுமன்ற உறுப்பினர்.
- 1984 - அப்துல் காதர் லெப்பை, ஈழத்துக் கவிஞர் (பி. 1913)
- 1994 - நீல்ஸ் காஜ் ஜேர்ன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)

1737-இந்தியா பங்களாத்தில் கிளம்பிய 40 அடி உயர அலை சுமார் 3இலட்சம் பேரைக் கொன்றது.

# ஈழத்தவர் வரலாறு

58

## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்


திருவிழாக்காலங்களில், கந்தசுவாமி கோயிலின் ஒரு தாபகராகிய புவனேகபாகு

'சுப்பையா குருக்களிடம், நீதிபதி சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனால் வழங்கப்பட்ட, ஆலயப் பண்டசாலையின் ஒரு திறப்பு குருக்களிடமிருந்து மீளப் பெறப்பட்டு, ஆறுமுக மாப்பாணரிடம் கையளிக்கப்பட்டது.

கந்தசுவாமி கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்த ஆறுமுக மாப்பாணர் தமது முன்னோர் போல, கச்சேரி சிறாப்பராகவும் விளங்கினார். 'கி.பி.1811 இல் கச்சேரியில் காசு குறைந்ததென்னுங் காரணத்தால் மாப்பாணர் சிறாப்பு வேலையால் விலக்கப்பட்டார். விலகிய சில நாட்களுள் அவர் இறந்திருக்க வேண்டும். அவருக்குப்பின் அவர் மருமகளாகிய சின்னத்தம்பியென்பவர் கோயிலதிகாரத்தையேற்றனர். பின்பு சிறாப்பு மாப்பாணருடைய பேரனாகிய ( இரகுநாத ) மாப்பாண முதலியார் அதிகாரியாயினர்.

தெரியவில்லை.

'கி.பி.1851 இல் கோயில் அர்ச்சகர்களாயிருந்த பிராமணர், தேசாதிபதியின் கைச்சாத்துடன் தங்கள் முன்னோருக்கு அதிகாரச்சிட்டுக் கொடுத்திருந்ததென்றும், தங்களுக்கும் அவ்வித சீட்டுக்கிடைக்க வேண்டுமென்றும் தேசாதிபதிக்கு விண்ணப்பித்தனர். அதற்குக் கண்டி ஆதீன புத்த கோயில்களிலுள்ள குருமாருக்கன்றிப் பிராமணருக்கு அவ்வித சீட்டுக் கொடுப்பதில்லையென்றும், அவர்களுள் வியாச்சியமிருந்தால் டிஸ்திரிக் கோட்டில் வழக்குத் தொடுத்துத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் அரசாட்சியார் உத்தரவிட்டனர். அப்படியே வழக்கு



நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

'1807 இல் தீவாந்தர தண்டனையடைந்த மலாக்காவுக்கு அனுப்பப்பட்டு, 1812ல் மன்னிக்கப்பட்டு திரும்பி வந்த வில்லவராய முதலியாரும், பெரிய தாமோதரப்பிள்ளையும் பிராமணர் பக்கஞ் சார்ந்து (இரகுநாத) மாப்பாண முதலியாருக்கு மிகவும் இடர் விளைவித்தனர். அது பற்றி மாப்பாண முதலியார் 1819ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில், அவர்கள் தனக்குச் செய்யும் இடையூறுகளைப் பற்றி பிறௌன்றிக் தேசாதிபதி அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்தனர். அதனை அவ்வூர் சர்வாதிகாரி ( கலக்டர் ) யே கவனித்து, அதற்கு வேண்டிய நீதிசெய்ய வேண்டுமென்று தேசாதிபதி கட்டளையிட்டனர். கலக்டர் செய்த நீதியின்னதென்று வைக்கப்பட்டது.

உடனே அக்காலத்திருந்த கோயிலதிகாரியாகிய இரகுநாத மாப்பாண முதலியார் பிராமணருக்கு அவ்வித அதிகார நியமனம் கொடுப்பதற்கு அரசினர்க்கு எதுவித சுதந்திரமுமில்லையென்றும், இருந்தால் அரசினரே அதனை வெளிப்படுத்த வேண்டுமென்றுந் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தனர். டயிக் ஏசண்டர் அவ் விண்ணப்பத்தைப் பற்றி விசாரித்துச் செய்த அறிக்கையினால் அரசாட்சியார் அக்காரியத்திற் பிரவேசியாது நெகிழ விட்டனர்.'

எனவே, யாழ்ப்பாணக் கலெக்டரின் இச் செயலினால் கிருஷ்ணையர் கப்பையரின் பரம்பரையினர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயவுரிமையை இழந்தனர். மாப்பாண குடும்பத்தினர் ஆலயத்தில் ஏகபோகவுரிமையைப் பெற்றனர்.

**ஆதியில் வழங்கிய வழக்கம்**

"55 திருவிழாக்கள் வருடந்தோறும் நடைபெறும். ஆறுகாலப் பூசை, மஹோற்சவம், ஆடி - ஆவணியில் 25 நாட்களுக்கு நடைபெறும். சுவாமியை மக்கள் தோளிற் காவிக் கொண்டு நடந்தும், வாகனத்தில் வைத்தும் வீதிவலமாகச் சுற்றி வருவார்கள். கிழக்கு வீதியும் கோயிற்றெரு. மேற்கு வீதி பருத்தித்துறை றோட்டிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லும் தெரு. தெற்கு வீதி பருத்தித்துறைத் தெரு. மஹோற்சவ காலத்தில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து 1000 தொடக்கம் 2000 யாத்திரிகர் சமூகமளிப்பர்' என வடமாகாண ஏசெண்டராக இருந்த சேர் வில்லியம் குறொப்ரன் துவைனம் தனது குறிப்பில் எழுதியுள்ளதாக குல சபாநாதன் தனது நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

**கலாநிதி க.குணராசா**
செங்கை ஆழியான்

ஆதியில் நல்லூர்க கந்தசுவாமி கோயில் திருவிழா, இன்றைய காலவேளைகளில் நிகழும் திருவிழாக்கள் போன்று நிகழவில்லை. அறையும்பறையொலியோடு குமிழ்ஞ் சூழ் வெளிச்சத்தில் திருவிழா நடந்து, பின்பு நானாவித வாத்தியவொலியோடு தீவர்த்தி வெளிச்சத்தில் திருவிழா நடந்தது. (தொடரும்)

## யாழில் மீளக்குடியமரவென சிங்களக் குடும்பங்கள் வருகை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்வுக்கென நூறு சிங்கள குடும்பத்தினர் வந்துள்ளதாக சிங்கள ஊடகமான லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல தசாப்த காலமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வர்த்தக மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வந்த சிங்களக் குடும்பங்கள், கடந்த 83 ஆம் ஆண்டு கலவரத்தின் போது இடம்பெயர்ந்தனர் தற்போது அவர்கள் மீள்குடியேறும் நோக்கில், யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளனர்.

குறித்த சிங்களக் குடும்பங்கள் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளதாகவும், யாழ்ப்பாண புகையிரத நிலையக் கட்டடங்களில் இவர்கள் தற்காலிகமாக தங்கியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமக்கு, மீள்குடியேறுவதற்கு பொருத்தமான காணிகளை வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே தங்கியிருந்த காணிகளை வழங்கமுடியாவிட்டால் வேறு இடங்களில் காணிகளை வழங்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-2,4)

## பட்டப்பகலில் திருட்டு

(நல்லூர்)

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் 1 மணியளவில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகை என்பன கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது வீட்டில் இருந்தவர்கள் தோட்டத்திற்கு சென்றிருந்த வேளையிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதே வேளை கல்வியங்காடு விளையாட்டு அரங்கு காளி கோவிலடியிலும் திருநெல்வேலி இராச வீதியிலும் கடந்த சில தினங்களுக்கு முன் பட்டப்பகலில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். (எ-4,134)

## மரவேலை தொழிலகங்களை பதிவு செய்ய கால அவகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள மரக்காலைகள் மற்றும் மரவேலைத் தொழிலகங்கள் அதிகமானவை முறையாகப் பதிவு செய்யப்படாமலும் அனுமதிப் பத்திரங்கள் இன்றியும் இயங்குபவை என்பது அண்மையில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் அறிய வந்துள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இந் நடைமுறை பின்பற்றப்படாததைக் கருத்திற்கொண்டு இவ் வருடம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மரக்காலைகள் மற்றும் தொழிலகங்களைப் பதிவு செய்வதற்கான அவகாசம் உரிய அரச நிறுவனங்களின் அனுசரணையுடன் வழங்கப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

குறிப்பிட்ட மரவேலையுடன் தொடர்புபட்ட தொழிலகங்களைப் பதிவு செய்தல் சம்பந்தமான நடைமுறைகளைத் துரிதமாக முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர், உள்ளூராட்சி அமைப்புக்கள், வட்டவன அலுவலர், மத்திய சுற்றாடல் அதிகார சபை (வ) ஆகியோருக்கு கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அமைப்புக்கள் அலுவலர்களினால் வழங்கப்படும் சுற்றுச்சூழல் தொடர்பான அறிக்கைகளின் அடிப்படையிலேயே விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு அனுமதிப் பத்திரங்களைப் பெறாத தொழிலகங்கள் மீது ஜனவரி மாதம் முதலாம் திகதி பொலிஸார் , வட்டவன அலுவலர்கள் இணைந்து சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வர் என அரச அதிபர் எச்சரித்துள்ளார். (எ)

## ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சி — நவம்பர் 18 இல் ஆரம்பம் !

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் தவணைக்கால பதவியேற்பு எதிர்வரும் நவம்பர் 18 அல்லது 19 ஆம் திகதியில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டளஸ் அழகப்பெரும இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இது தொடர்பான நிகழ்வு , அனுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொண்ட 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் படி 3ஆம் தவணைக்கும் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## திருக்குறள் மனனப் போட்டி

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 4,5 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான திருக்குறள் மனனப்போட்டி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வடமராட்சி வலய ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

# 02 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

இரண்டாம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் மனதில் தோன்றும் எண்ணங்களின் அடிப்படையிலேயே செயற்படும் தன்மை உடையவர்கள். இவர்களில் பலர் பிறரைப் பின்பற்றிச் செயற்படும் தன்மை உடையவர்களாக இருப்பதால், இவர்களின் மனதில் தோன்றும் எண்ணம்போல் செயற்படுவார்கள். அடுத்தவரைப் பின்பற்றும் அதேவேளையில் தங்களைப் பற்றியும் நினைத்தபடி தொழில் செய்யும் தன்மை உடையவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் உயர்நிலையை அடைந்தவுடன் உதவி செய்தவரை விட தான் செய்த முயற்சி, தனது உழைப்பு, தான் தந்த யோசனை என்று, எல்லாமே தன்னால்தான் நடந்தது என்று கூறிக்கொள்ளும் மனநிலை உடையவர்கள். இவர்களின் தொழில் அதிபதி எண் 3, தொழிலுக்கு உதவி செய்யும் எண்கள் 4 மற்றும் 7 ஆகும். 2ஆம் திகதியில் பிறந்தவர்களுக்கு 4 மற்றும் 7ஆம் எண்கள் தொழில் உதவி எண்களாக அமைந்துள்ளதால், பெரும்பாலும் மன நிறைவாகவே தொழில் செய்யும் நிலை இருக்கும்.

இரண்டாம் திகதியில் பிறந்து அரசுத் துறைகளில் பணிபுரிவோர் பெரும்பாலும் மேலதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டுப் பணிபுரியும் நிலையே இருக்கும். அடுத்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து பின் செயல்படும் நிலையிலேயே இருப்பார்கள் அடிக்கடி மனதில் குழப்பமும் தயக்கமும் உண்டாகும் நிலை இருக்கும். இவர்கள் பெரும்பாலும் இரண்டாம் நிலை பதவியிலேயே இருப்பதைக் காணலாம்.

எண் ஆதிக்கம் அதிகமாக இருந்தால் மனதில் தோன்றியதை மட்டும் செயற் படுத்தும் நிலை உண்டாகும். இவர்களின் நடவடிக்கைகள் மற்றும் அணுகுமுறைகள் பெண்களைப் போன்றே இருக்கும். பெண்களிடம் அதிகம் அன்பு பாராட்டும் குணம் உடையவர்களாக இவர்கள் இருப்பதால் பெண்கள் மூலமும் இவர்களுக்குப் பிரச்சினைகள் அதிகம் ஏற்படும். பெண்களால் எந்த அளவுக்குப் புகழும் மரியாதையும் பெற்றார்களோ அதைப்போலவே பெண்களால் அவமரியாதையும் தலைகுனிவும் உண்டாகும்.

எண் ஆதிக்கம் நிறைவாக இருந்தால் எந்தப் பிரச்சினையிலும் இவர்கள் தப்பித்துவிடுவார்கள். எண் ஆதிக்கம் சரிவர அமையப் பெறாதவர்கள் ஏதேனும் ஒரு பிரச்சினையில் மாட்டிக்கொண்டு சிரமப்படும் நிலையில் இருப்பதைக் காணலாம். இவர்களின் தொழில் அதிபதி எண்ணான 3இற்கு நன்மை செய்யும் எண்ணாக 4 மற்றும் 7ஆம் எண்கள் வருவதே பிரச்சினைக்குக் காரணமாகிறது.

3ஆம் எண்ணின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் 4 மற்றும் 7ஆம் எண்களின் ஆதிக்கம் குறைவாக இருக்கும். 4 மற்றும் 7ஆம் எண்களின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும்பொழுது 3ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருக்கும். அதனால் தான் இவர்களின் மனதைப் பொறுத்தே வேலை செய்யும் நிலை உண்டாகும். எண் ஆதிக்கம் குறையும் போது மனதளவில் பாதிக்கப்படுவர்கள் இவர்களே.

**இவர்கள் திங்கட்கிழமை தோறும் மீனாட்சி அம்மனுக்கு வெள்ளை மலர் சாற்றி வழிபாடு செய்து எண் ஆதிக்கத்தைப் பெறலாம்.**

இந்தத் திகதியில் பிறந்த தொழில் அதிபர்கள் பெரும்பாலும் அடுத்தவர்களின் முயற்சியையும் உழைப்பையும் பெற்று முன்னேறியவர்களாகவே இருப்பார்கள்.மனதில் நினைத்ததை மட்டுமே செயற்படுத்தும்தன்மை கொண்டவர்கள் என்பதால் திடீர் திடீரென்று இவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும். தொழில் சரிவை விரும்பாத இவர்கள் பிறரைப் பின்பற்றியோ அல்லது பிறருக்கு இடையூறு ஏற்படுத்தியோ தனக்கு பொருள் அல்லது இலாபம் கிடைக்க வேண்டும் என்று செயற்படக்கூடியவர்கள். இவர்களின் தொழில் சரிவிற்குப் பெரும்பாலும் பெண்களே காரணமாக இருப்பதைக் காணலாம்.

எண் ஆதிக்கம் நிறைவாக இருந்தால் பெண்களால் உயர்வும் எண் ஆதிக்கம் குறைந்தால் பெண்களால் துன்பங்கள் பிரச்சினைகள் என மன நிம்மதியை இழப்பார்கள். 4 மற்றும் 7ஆம் எண்கள் தொழிலுக்கு நன்மை செய்யும் எண்களாக இருப்பதால் எண் வசியம் ஏற்படும் பொழுது ஏற்றமும் எண் வசியம் குறையும்பொழுது தாழ்வும் ஏற்படும். 5, 6, 7 ஆகிய எண்களில் பெயர் அமையப் பெற்றவர்கள் ஒரே மாதிரியான உயர்வைப் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். 2ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருந்தால் தன் நிலையை விட்டுக்கீழே இறங்கும் நிலை உருவாகும்.

**என்றும் ஒரே மாதிரியான நன்மைகளைப் பெற வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கைக்கு அரளிப்பூ கொண்டு அர்ச்சனை செய்து வழிபட நன்மைகள் அதிகம் கிடைக்கப் பெறுவர்.**

இந்த எண்ணில் பிறந்த தொழிலாளர்கள் பெரும்பாலும் அரைகுறை மனதோடு இருக்கும் நிலையில்தான் தொழில் செய்வார்கள். அடிக்கடி இடம் மாறும் குணம் அதிகம் இருக்கும். எண் ஆதிக்கம் நட்பு எண்ணின் ஆதிக்கத்தை விட குறைவாக இருப்பதால் தான் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். இவர்களின் தொழில் அதிபதி எண் 3 மற்றும் நன்மை செய்யும் எண்கள் 4, 7 ஆகியவற்றின் ஆதிக்கம் நேர்மாறாகவும் குறைவாகவும் இருப்பதால் இவர்கள் தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். மேலும் பெண்களால் துன்பப்படவேண்டிய சூழ்நிலை அதிகம் காணப்படுவதால் அடிக்கடி பிரச்சினைகளை சந்திக்கும் நிலை இருக்கும்.

மனைவி எண் சரியாக அமைந்தவர்கள் சீரான தொழில் அமைப்பைப் பெற்று நிரந்தரமான தொழில் செய்து வாழும் நிலை இருக்கும்.எண் ஆதிக்கம் மற்றும் தொழில் எண் ஆதிக்கம் அல்லது நன்மை செய்யும் எண் ஆதிக்கம் அதிகமாக இருந்தால் உழைத்து முன்னேறி சுய தொழில் செய்யும் நிலையை விரைவில் பெற்று விடுவார்கள்.

**தொழில் எண் ஆதிக்கம் பெறவும் நன்மை செய்யும் எண் ஆதிக்கம் பெறவும் திங்கட் கிழமை தோறும் மாரியம்மனுக்கு நெய் விளக் கேற்றி மனதார வழிபாடு செய்து வர ஏற்றம் உண்டாகும்.**

2ஆம் திகதியில் பிறந்த கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் மனதில் நினைத்த மாத்திரம் செயற்படும் நிலையை உடையவர்கள். மனதால் வாழும் கலை இவர்களுடைய யோகம் அதே மனதால் வாழும் நிலை இவர்களின் அவயோகம் இவர்கள் ஆண்களால், பெண்களால் பல சிக்கலில் சிக்கிக் கொண்டு துன்பத்தை அனுபவிப்பவர்களாக இருப்பர். இவர்களின் தொழில் எண் 3 அறிவைக் கொடுத்து உயர்த்தும். உதவி செய்யும் 4 மற்றும் 7ஆம் ஆண்களின் ஆதிக்கத்தைப் பொறுத்து இவர்களின் தொழில் ஏற்றம் பெறவும் வீழ்ச்சி அடையும் நிலையும் இருக்கும்.

இவர்கள் உயர்ந்த நிலையில் இருக்கும் பொழுது செய்யும் சில தவறுகளால் பின்னாளில் மனவேதனை அடைபவர்களாக இருப்பார்கள்.

**இவர்கள் திங்கட்கிழமைகளில் கலை வாணியை வெண் தாமரை மலர் சாற்றி வழிபாடு செய்து வர துயர் நீங்கி நன்மைகள் கிடைக்கபெறுவார்கள்.**

2ஆம் திகதியில் பிறந்து விதி எண் 1 ஆக இருப்பவர்களுக்கு 4 அல்லது 6 வருடங்கள் இடைவெளி விட்டு சிறப்பான பலன்கள் வாழ்நாள் முழுவதும் கிடைக்கப் பெறுவார்கள் பிறந்த திகதி 2 விதி எண் 2 ஆக இருப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் வாழ்நாளில் யோகம் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 2 விதி எண் 3 ஆக இருப்பவர்களுக்கு எண் ஆதிக்கத்தைப் பொறுத்து வாழ்நாள் முழுவதும் யோகம் செய்யும். பிறந்த திகதி 2 விதி எண் 4 ஆக இருப்பவர்களுக்கு வாழ் நாளில்

**எஸ்.என்.ஹரிஜி**

24 ஆண்டுகள் யோகம் செய்யும். பிறந்த திகதி 2 விதி எண் 5 ஆக இருப்பவர்கள் 23 ஆண்டுகள் நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 2 விதி எண் 6 ஆக இருப்பவர்களுக்கு 33 ஆண்டுகள் நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 2 விதி எண்7 ஆக இருப்பவர்களுக்கு 19 ஆண்டுகள் மிக அதிகமான நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 2 விதி எண் 8 ஆக உள்ளவர்களுக்கு விதி எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் 12 வருடங்கள் நற்பலனை செய்யும். பிறந்த திகதி 2 விதி எண்9 ஆக இருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் 11 ஆண்டுகளும் அதிகபட்சமாக 29 ஆண்டுகளும் நற்பலனை செய்யும்

குறிப்பு:- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், தொழிலுக்கு நன்மை செய்யக்கூடிய எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மற்றும் பலன்கள் மாறுபடும்.

(தொடரும்)

# கௌரவ கலாநிதி பட்டம் பெறும் நாதஸ்வரமேதை பஞ்சாபிகேசன்



யாழ். பல்கலைக்கழகத்தின் இவ்வாண்டு பட்டமளிப்பு விழாவில் பிரபல நாதஸ்வர வித்துவான் சாவகச்சேரி கே.எம். பஞ்சாபிகேசனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் புகழடைந்த பஞ்சாபிகேசன் 1924ஆம் ஆண்டு தவில்வித்துவான் முருகப்பாபிள்ளை, சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வராய் பிறந்தார். இவரது சகோதரன் நடராஜசுந்தரம்பிள்ளை பிரபல தவில்வித்துவான் ஆவார். சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற இவர் 1934ஆம் ஆண்டளவில் பிரபல நாதஸ்வர வித்துவான்களான சண்முகம்பிள்ளை, அப்புலிங்கம்பிள்ளை, இராமையாபிள்ளை, கந்தசாமிப்பிள்ளை ஆகியோரிடம் நாதஸ்வர இசைப் பயிற்சியினைப் பெற்றார்.

தொடர்ந்து தனது இசையாற்றலை வளர்த்துக்கொள்வதற்காகத் தமிழகம் சென்ற இவர் நாதஸ்வர இசைமாமேதைகளான திருவாவடுதுறை ராஜரட்ணம்பிள்ளை, கக்காயி நடராஜசுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் பயின்றார். பின்னர் ஐயம்பேட்டை வேணு கோபால் பிள்ளையிடம் பயிற்சி பெற்று பாரம்பரிய மரபு வழிக்கச்சேரி செய்யும் முறைமையினை நன்கு பயின்று கொண்டார்.

தனது 14ஆவது வயது முதல் நாதஸ் வரக் கச்சேரியை நிகழ்த்திய இவர் அன்று தொட்டு படிப்படியாகப் பெரும் புகழ்கொண்டார்.

அளவெட்டி மாணிக்கம் இரத்தினம் அவர்களைத் தனது வாழ்க்கைத்துணையாக ஏற்றுக்கொண்ட இவருக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் மூன்று பெண்பிள்ளைகளும் உள்ளனர். இவரது புதல்வர்களான நாகேந்திரம், விக்னேஸ்வரன் ஆகியோரும் தந்தையின் தடம் பற்றி நாதஸ்வரத் துறையில் புகுந்து வித்துவான்களாய் விளங்கி வருகின்றனர்.

தமிழகத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்களான திருவாரூர் இலட்சியப்பா, திருநெல்வேலி பிச்சையப்பாகம்பர், மாசிலாமணி போன்றோறோடும் நம் நாட்டின் பிரபல கலைஞர்களான நல்லூர்சிவசாமி , அளவெட்டி பத்மநாதன் போன்றோரோடும் இணைந்து பல கச்சேரிகளில் இவர் வாசித்துள்ளார். உலகப்புகழ்பெற்ற தவில்மேதை தட்சிணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து இவர் செய்த கச்சேரிகள் மறக்க முடியாதவை.

இவர் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் **இசைப்பேரறிஞர்** விருதினையும் கலாசார அமைச்சின் **கலாபூஷணம்** விருதினையும் யாழ். இந்துகலாசார சபையின் **சிவ கலாபூஷணம்** விருதினையும் பெற்றவராவார். 1998இல் வடகிழக்கு மாகாண சபையினால் இவருக்கு ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது.

**ச.லலீசன்**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தினால் **இசைவள்ளல் நாதஸ்வரகலாமணி** எனும் பட்டமும், கல்வி அமைச்சினால் **நாதஸ்வரகான வாரிதி** எனும் பட்டமும், இவருக்கு வழங்கப்பட்டன. மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக், கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் இவரது இசைக்கச்சேரிகள் நிகழ்ந்துள்ளன.

தனிமனித ஒழுக்கம், பண்பாடு, தன்னடக்கம் ஆகிய நற்பண்புகளின் உறைவிடமாய் திகழும் பஞ்சாபிகேசனுக்கு யாழ்பல்கலைக்கழகம் இவ்வாண்டு கௌரவ கலாநிதி விருதினை அளிப்பது இசைரசிகர் கள் அனைவரதும் மனங்களை எல்லையற்று மகிழ்வுறச் செய்துள்ளது.

# மூன்று கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கொள்ளை

## வான் படைவீரர் கைது

(கொழும்பு)

மூன்று கோடி ரூபா தங்க ஆபரணக் கொள்ளையில் ஈடுபட்ட முன்னாள் வான் படைவீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் வெள்ளவத்த பிரதேசங்களில் குறித்த முன்னாள் விமானப் படை விரர் கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளதாகவும் வீடுகளை உடைத்து இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போது 2 மில்லியன் பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள் இவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 32 வயதானகுறித்தவான்படை வீரர் போதை வஸ்துவுக்கு அடியமையானவர் என்றும் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 15ஆயிரம் ரூபா வரையில் போதைப் பொருட்களை உட்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் பாவனை காரணமாக குறித்த வான்படை வீரர் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(எ-4,2)

# கடவுச் சீட்டில் மோசடி செய்ததாக ரங்கே பண்டார மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடவுச்சீட்டில் மோசடி செய்து நோர்வே செல்ல முற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நோர்வேக்கு செல்வதற்கான விசா விண்ணப்பங்களுக்காக ரங்கே பண்டார சமர்ப்பித்த கடவுச் சீட்டு போலியானதாக இருக்கலாம் என நோர்வே தூதரகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்ததையடுத்து இதுகுறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

போலியான கடவுச்சீட்டை சமர்ப்பித்து விசா பெற்றுக்கொள்ள முயற்சித்ததாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளின்போது புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார, அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகள் ஆகியோரின் கடவுச்சீட்டுக்கள் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாகவும் கடவுச் சீட்டில் விசா முத்திரைகள் குத்தப்பட்டுள்ள விதத்தில் சந்தேகம் நிலவுவதாகவும் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.(எ-4, 2)

# 10 இலட்சம் கடல்வாழ் உயிரினங்கள் பூமியில் வாழ்வதாக கண்டறிவு !

(லண்டன்)

கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டுகளாக கடல் வாழ் உயிரினங்கள் குறித்து கணக்கெடுப்பும், ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. அதன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் 10 இலட்சத்து 40 ஆயிரம் வரையிலான கடல் வாழ் உயிரினங்கள் பூமியில் வாழ்வது தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் நுண் உயிரினங்க்ள் அடங்காது. ஆனால் 5ஆயிரம் வகை புதிய உயிரினங்கள் இதில் அடங்கும்.


தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள உயிரினங்களில் புதியவகை நண்டுகள் உள்ளன. இவை “ கிவிடேக்” என்ற புதிய குடும்ப வகையைச் சேர்ந்தவை. இவற்றிற்கு “கிவா” வன விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். இவை ஈஸ்டர் தீவுகளின் தென்புறத்தில் உள்ளன.

இவை தவிர பிணைன்டு லாப்ஸ்டார், ஒக்டோபஸ் தோற்றம் கொண்ட ஹிப் போலைட் கேடாகிராபர் போன்றவையும் அடங்கும். இவை பெரிய காது போன்ற செதில்களின் மூலம் தண்ணீரில் நீந்துகின்றன.

மேலும் புழுவகைகள், நத்தை வகைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கடல் வாழ் உயிரினங்களில் 80 சதவீதத்துக்கும் மேல் அவுஸ்திரேலியாவிலும், 70 சதவீதம் ஜப்பான், 75 சதவீதம் மத்திய தரைக்கடலின் ஆழ் பகுதியிலும், 58 சதவீதம் அண்டார்டிகாவிலும், 38 சதவீதம் தெற்கு ஆபிரிக்காவிலும், 10 சதவீதம் ஐரோப்பா கடல் பகுதியிலும் வாழ்கின்றன.

ஆய்வில் 80 நாடுகளைச் சேர்ந்த 640 நிறுவனங்களும் 2ஆயிரத்து 700 விஞ்ஞானிகளும் பங்கேற்றனர்.


இதற்காக கடலில் 9 ஆயிரம் நாட்கள் தங்கியிருந்தனர். 10 ஆயிரம் மீற்றர் ஆழ் 0 கடலிலும் தங்கள் ஆய்வை நடத்தி முடித்துள் ளனர். (ஸ்ரீ-2)



யாழ்.மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையின் சிறுவர் பூங்கா திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் பூங்காவை மாரீசன்கூடல் பங்குத்தந்தை அருட்பணி எம்.எம்.ஏச் ஞானேந்திரன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் சூ.நோபேட் உதயகுமார், சண்டிலிப்பாய் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி றூபா உதயரட்ணம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கௌரவிப்பு

## கம்பவாரிதிக்கு மலேசியாவில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் விருது



மலேசியா கண்ணதாசன் அறவாரியம் நடாத்தவுள்ள 2010 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழாவில் சிறந்த சொற்பொழிவாளரும் கம்பன் கழக ஸ்தாபகருமான கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு கவிச்சக்கரவர்த்தி கம்பன் விருது வழங்கப்பெறவுள்ளது. மலேசியாவில் ஆண்டு தோறும் கம்பன் விழாவை நடாத்தி வரும் மலேசியா கண்ணதாசன் அறவாரியம், இவ்வாண்டுக்கான கம்பன் விழாவை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை கோலாலம்பூரில் நடாத்தவுள்ளது.

இந்த விழாவிலே, கம்ப இராமாயண இலக்கியத்தில் தலைசிறந்த அறிஞருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பெற்றுவரும் கவிச் சக்கரவர்த்தி கம்பன் விருது இவ்வாண்டு கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என விழா அமைப்பாளரான மலேசிய அமைச்சர் செனட்டர் சரவணன் அறிவித்துள்ளார்.

கம்பவாரிதி அவர்களின் கம்ப இலக்கியப் புலமையையும் பணிகளையும் பாராட்டி, முன்பு சென்னைக் கம்பன் கழகம் கம்ப கலாநிதி இராதாகிருஷ்ணன் விருதையும், சிறந்த கம்ப இலக்கிய அறிஞருக்கான கம்பர் விருதையும், வேலூர் கம்பன் கழகம் கம்பவாணர் விருதையும், பாண்டிச்சேரிக் கம்பன் கழகம் பானுமதி அறக்கட்டளைப் பரிசினையும் வழங்கிக் கௌரவித்துள்ளன. அறவாணன் அறக்கட்டளை அமைப்பினர், உலக சாதனையாளர் விருதையும், திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகத்தினர் கபிலர் விருதையும் கம்பவாரிதிக்கு வழங்கியுள்ளன ரென்பதும் குறிப்பிடத்தக்கது.

மலேசியா கண்ணதாசன் அறவாரியம், ஆண்டுதோறும் நடத்திவரும் கம்பன் விழாவில் இராமாயண இலக்கியத்தில் தலைசிறந்த அறிஞருக்கு கவிச் சக்கரவர்த்தி கம்பன் விருதினையும், சிறந்த சமுதாயப் பணியாளருக்கான சடையப்ப வள்ளல் விருதினையும், குலோத்துங்கன் விருதினையும் வழங்கி வருகின்றது. இவ்வாண்டு இவ் விருது வழங்கல் விழாவின் தொடக்க நாளான 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## ஸ்ரீ பிரசாந்தனுக்கு 'செந்தமிழ்த் திலகம்' பட்டம்



தமிழ்நாடு அரசின் மகளிர் ஆணையமும், எம்.ஜி.ஆர்.ஜானகி மகளிர் கல்லூரியும் இணைந்து நடாத்திய எட்டாவது சர்வ தேசப் பெண்ணிய மாநாட்டில் ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், கம்பன்கழக அமைப்பாளருமான ஸ்ரீ.பிரசாந்தனுக்கு ' செந்தமிழ்த் திலகம்' பட்டம் வழங்கப்பெற்றுள்ளது.

தமிழ் ஐயா கழகத்தின் அழைப்பில் நடை பெற்ற இந்த எட்டாவது சர்வதேசப் பெண்ணிய மாநாட்டிற்கு அளிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டு ரைகளிலே மிகச் சிறந்த கட்டுரைகளுள் ஒன்றாகப் பிரசாந்தனின் கட்டுரை தெரிவுசெய்யப்பெற்று, அவருக்குப் பரிசுச் சான்றிதழும், செந்தமிழ்த் திலகம் விருதும் வழங்கப்பெற்றுள்ளன. கடந்த 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற்ற சர்வதேசப் பெண்ணிய மாநாட்டின் நிறைவு நாள் விழாவில் இந்த விருதை வணக்கத்துக்குரிய கலாநிதி குமாரசாமித் தம்பிரான் வழங் கினார்.

மேலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் சிறந்த ஆய்வாளருக்கு வழங்கப் பெறும் வள்ளலார் அறக்கட்டளைப் புலமைப்பரிசிலும் பிரசாந்தனுக்கு வழங்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டிலும் சிறந்த ஆய்வு மற்றும் புலமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் கலாநிதிப் பட்ட ஆய்வாளர் ஒருவருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப் பெறும் இப் புலமைப் பரிசில் 2009-2010 ஆம் கல்வியாண்டில் பிரசாந்தனுக்கு கிடைத் துள்ளது.

(ந)

# வடமராட்சி கிழக்கில் 2 பாடசாலைகளை புனரமைக்க சேவாலங்கா முன் வருகை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கில் இரு பாடசாலைகளை புனரமைப்பு செய்வதற்கு சேவாலங்கா நிறுவனம் முன்வந்துள்ளது.

யுத்தத்தினால் முற்றாக சேதம் அடைந்த மாமுனை அ.த.க. பாடசாலை, செம்பியன் பற்று றோ.க.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளுமே விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

பாடசாலைக்கு தேவையான தளபாடங்கள், மலசலகூடம், குடிநீர் வசதிகள், விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றுக்கான மதிப்பீடுகளை அந் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இவ் இரு பாடசாலைகளையும் மிக விரைவில் புனரமைப்பு செய்யவுள்ளதுடன் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் உள்ள வெற்றிலைக் கேணியில் உள்ள இரு பாடசாலைகள் மற்றும் கடமைக்காடு றோ.க.த.க. பாடசாலை, கேவிலிலுள்ள பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளை மக்கள் மீள் குடியேற்றம் செய்த பின் புனரமைத்துத் தருவதாக அந் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஸ்ரீ-24)

# அனோமா கவலையில் கூறுபவைகளுக்கு அரசாங்கம் பதிலளிக்கத்தேவையில்லை!

## அமைச்சர் டலஸ் விளக்கம்

(கொழும்பு)

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தின் ஊடாக சரத் பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை ஜனநாயகத்துக்கு விழுந்த அடியென்று தவறான அர்த்தப்படுத்தலை வெளியிட முயற்சிக்கின்றனர். அனோமா பொன்சேகா கூறும் விடயங்கள் குறித்து நான் கருத்து வெளியிட விரும்பவில்லை. அவர் பொன்சேகாவின் பாரியார் எனவே அவருக்கு கவலை இருக்கும். அதே போன்று இதற்கு முன்னர் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உள்ளாகிய இராணுவ அதிகாரிகளின் பாரியார்களும் இவ்வாறு கவலையடைந்திருக்கலாம் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

சிறந்த ஒழுக்கமுடைய இராணுவம் என்பதாலேயே பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடிந்தது. அன்று 1983 ஆம் ஆண்டு யூன் மாதம் திருநெல்வேலியில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதும் அங்கு கிராமங்களில் இராணுவ வீரர்கள் புகுந்து தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த நேரத்தில் தெற்கின் மனநிலை புலிகளுக்கு கடுமையான எதிர்ப்பானதாக இருந்தது. எனினும் அக்காலத்தில் கூட இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டு சம்பவத்தில் தொடர்புபட்ட 69 அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அதே சட்டம் தான் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா தனது தளபதி பதவிக்காலத்தில் 156 இராணுவ அதிகாரிகளையும் 5ஆயிரத்து 88 இராணுவ வீரர்களையும் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்களின் ஊடாக வீட்டுக்கு அனுப்பியுள்ளார். அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஜனாதிபதி முப்படை தளபதி என்றவகையில் கையெழுத்திட்டார். இந்த இராணுவ நீதிமன்ற தீர்ப்பானது அரசினதோ அமைச்சரவையினதோ அழுத்தங்களால் அளிக்கப்பட்டதல்ல. மாறாக சட்டத்துக்கு அமைவாக வழங்கப்பட்டது.

சட்டத்தை ஏளனம் செய்ய முடியாது. இந்த தீர்ப்பின் ஊடாக ஜனநாயகம் நசுக்கப்பட்டுள்ளதாக கூறுவது அர்த்தமில்லாத விடயமாகும். அது முறையல்ல. அவ்வாறான கூற்றுக்களை நிராகரிக்கின்றோம். மத போதகரோ அரசியல்வாதியோ யாராக இருந்தாலும் சட்டத்தை ஏளனம் செய்யமுடியாது.

எனவே இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் தவறான அர்த்தப்படுத்தல்களை முன்வைக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுகின்றோம். அதனை அகௌரவப்படுத்த வேண்டாம். இவ்வாறு தவறாக அர்த்தப்படுத்தப்பட்டால் எமது இராணுவம் தொடர்பில் சர்வதேச ரீதியில் பாதிப்புகள் ஏற்படலாம்.

இந் நிலையில் சரத் பொன்சேகா நடைமுறையை பின்பற்றி ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோரலாம். மேன் முறையீடு செய்வதற்கு ஜனாதிபதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியல்ல. சரத் பொன்சேகாவைவிட தரத்தில் குறைந்த அதிகாரிகளே இராணுவ நீதிமன்றத்தில் நீதிபதிகளாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறாயின் உயர்ந்த தரத்தில் அதிகாரிகள் இல்லை என்பதற்காக இராணுவ நீதிமன்றத்தை அமைக்காமல் இருக்க முடியுமா? பராக்கிரம பன்னிப்பிட்டியவுக்கு எதிராக இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டபோது அவரைவிட கனிஷ்ட தரத்தில் இருந்தோர்களே நீதிபதிகளாக சரத் பொன்சேகாவினால் நியமிக்கப்பட்டனர். இந்நிலையில் சரத் பொன்சேகா விடயத்தில் முப்படை தளபதி என்ற வகையில் ஜனாதிபதி அனைவரையும் நியமித்தார் என்றார். (எ-4)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையில் ஸ. ஆன்லக்ஷிகா-157, பெ. நிக்சன்-149 ஆகியோர் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர்.

மேலும் இப்பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய 25 மாணவர்களில் 8பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (2-4)

# சிரேஷ்ட புலி உறுப்பினர்கள் விரைவில் விடுதலையாவர்!

## அமைச்சர் டியூ குணசேகர உறுதி

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களைக் காலவரையறையின்றி தடுத்து வைக்கும் உத்தேசம் கிடையாது என சிறைச்சாலைகள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

1971, 1987 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் நீண்ட காலத்திற்குத் தடுத்து வைக்கப்பட்டதாகவும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக துரித கதியில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முனைப்புக் காட்டப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் சுமார் இரண்டாயிரம் விடுதலைப்புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்ய முடியும் என அவர் கூறினார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போது 11 ஆயிரத்து 696 விடுதலைப்புலி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். தற்போது 7 ஆயிரத்து ஒரு பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான்,ஈராக் போன்ற நாடுகளில் தீவிரவாத கைதிகள் தொடர்பில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

900 சிரேஷ்ட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக மட்டுமே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக போராட்டங்களை நடத்தி வரும் ஏனைய நாடுகளுக்கு இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்னுதாரணமாகத் திகழ்கின்றதென அவர் தெரிவித்துள்ளார். (எ-4-2)

# 31ஆம் நாள் கண்ணீர்க் காவியம்

மலர்வு 10 . 08 . 1934

உதிர்வு 07 . 09 . 2010



வாடி வருந்தி நின்று வாடாது எமைக்காத்த
தெய்வமே! எம் அம்மா
எட்டுக் குஞ்சுகளையும் இறகுகள் வைத்து
காத்தீர்களே! அம்மா
கண்ணும்கருத்திலும் காத்து நின்றீர்களே! அம்மா
எமக்கொரு துன்பமென்றால்
கதிகலங்கிப் போவீரே! அம்மா
எமக்கொரு குடும்பமென்று அமைத்துத்
தந்தாலும் உங்கள் பணி ஓயவில்லையே! அம்மா
வெளியில் நாம் சென்றால் வரும்வரையில்
வாசலில் காத்திருப்பீர்கள் அம்மா
உற்ற நேரத்தில் உறுதுணையாய்
உறுதி மொழி கூறுவீர்கள் அம்மா
எங்கு சென்றாலும் உங்கள் முகம்பார்த்துச்
செல்வோமே இனியார் முகம் காண்போம் அம்மா..?
உங்கள் பாசத்தால் அரவணைப்பால்
இன்னும் சிறுபிள்ளைகளாய் இருந்தோமே! அம்மா
தினம் தினம் நோயுடன் வாடிய போதும்
கடமையிலிருந்து தவறவில்லையே ! அம்மா
அம்மா நீங்கள் இன்னும் பல வருடம்
எங்களுடன் இருப்பீர்கள் என எண்ணியிருந்தோம்
சொல்லாமல் கொள்ளாமல் போனதேனம்மா!
செல்வங்கள் அள்ளித் தந்த செல்வ மகனைக்
காணாது துடித்தீர்களே! அம்மா
அந்த மகன் தவியாய் தவிப்பதை பார்க்கவில்லையே!
நீங்கள் சொல்ல வந்த
வார்த்தைகள் என்னம்மா...? உங்கள் உயிர்

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**
**தொ.பே:-0776151962**

## அமரர் திருமதி.வேலாயுதம் அன்னம்மா

(உரும்பிராய்)

07.09.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை 07.10.2010 இன்று எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, துண்டுப் பிரசுரங்கள் ஊடாக அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் மேலும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

பிரிந்த கணத்தை எண்ணிக்
கதறுகிறோம் அம்மா உங்கள் புன்னகை
முகத்தை இனி எங்கே காண்போம்...?
உங்கள் இனிய குரலை எங்கே கேட்போம்..?
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மாவைப் போல யாரை இனி இங்கே
காண்போம்..? ஆலமரம் சாய்ந்ததம்மா!
விழுதுகள் வேரின்றித் தவிக்குதம்மா !
எங்கள் குலவிளக்கு மறைந்ததனால்
எங்கள் மனையெல்லாம் இருள் சூழ்ந்ததம்மா
தான் தேடியவள் இல்லையே
இனி ஏன் என்னுயிரே என்று
உங்கள் கணவன் அழ!
மாமியைப் போல இல்லை நீங்கள் எங்கள்
தாயம்மா என மருமக்கள் புலம்பியழ!
அப்பம்மா அம்மம்மா என்று இனி
யாரை அழைப்பதென்று பேரப்பிள்ளைகள்
புலம்பி அழ! பாட்டி பாட்டி என்று பூட்டன் பூட்டிகள்
வீடெல்லாம் தேடியழ! உங்கள் உருவம்
மறைந்ததம்மா எங்கள் மனமெல்லாம்
சுமையம்மா கல்லாய் கனக்குதம்மா நீங்கள்
நின்றஇடம் இருந்த இடமெல்லாம்
கண்கள் தேடுதம்மா ஒருமாதம் ஆனதம்மா!
எத்தனை வருடங்கள் ஆனாலும்
உங்களை மறப்போமா...? அம்மா
பிறப்பென்று இனியிருந்தால் நீங்கள்
தான் எங்கள் அம்மா...!

**கணவன், பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

# பொதுமக்களின் ஒத்துழைப்புடன் டெங்குத்தடுப்பை முன்னெடுப்போம்

நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரமாகப் பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் மத்திய சுகாதார அமைச்சினால் இன்று தொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி வரையான நாடளாவிய ரீதியில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

## 07.10.2010-13.10.2010 தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்

இதற்கமைவாக டெங்கு தடுப்பு வாரம் யாழ். மாவட்டத்திலும் தீவிரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை- டெங்கு பரப்பும் நுளம்பு பெருகும் பிரச்சினைக்குரிய குறித்த பகுதிகளைப் இனங்கண்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுத்தல்.

நாளை வெள்ளிக்கிழமை- சமய வணக்கத்தலங்களில் டெங்கு கட்டுபாட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

09ஆம் திகதி சனிக்கிழமை- சகல வீடுகளிலும் / குடியிருப்புக்களிலும் டெங்கு கட்டுப் பாட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்

10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை- நகரப் பகுதிகள், மயானங்கள் போன்றவற்றில் டெங்கு கட்டுப்பாட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.

11ஆம் திகதி திங்கட்கிழமை சகல பாடசாலைகளிலும் டெங்கு கட்டுப்பாட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை- பராமரிப்பின்றியுள்ள காணிகள்/வீடுகள் -உரிமையாளர்கள் / குடியிருப்பாளர்களால் துப்புரவு செய் யப்பட வேண்டும்.

இறுதி நாளான 13ஆம் திகதி புதன் கிழமை-சகல அரச , அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் , சந்தைகள், பொது இடங்கள் யாவும் சிரமதானம் மூலம் டெங்கு கட்டுப்பாட்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளினை முன்னெடுத்தல் .

சுகாதார வைத்திய அதிகாரிகள் / பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளினை ஒழுங்கு செய்து நடைமுறைப் படுத்த வேண்டும். ஒவ்வொரு பிரதேசடெங்கு கட்டுப்பாட்டு கண்காணிப்புக் குழுக்களும் பிரதேசத்தை சுற்றிப்பார்வையிட்டு டெங்கு தடுப்பு செயற்பாடுகள் திருப்திகரமாகவும் , பூரணமாகவும் இடம்பெற்றதை உறுதிப் படுத்த வேண்டும். தற்போது இலங்கையில் டெங்கு நோயை கட்டுப்படுத்த கடுமையான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பெருக உடந்தையாக இருப்பவர்களுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம். ஆனால் நாம் சட்டத்தின் உதவியின்றி பொது மக்களின் ஒத்துழைப்புடனேயே இங்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புகின்றோம். ஆனால் இதற்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்கு நோய் பரவ உடந்தையாக இருப்பின் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட சகல நிறுவனத்தலைவர்களினதும் ஒத்துழைப்பினை முழுமையாக எதிர்பார்க் கிறோம்.

எனவே யாழ். மாவட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு தடுப்பு வாரத்தில் டெங்கு தடுப்பு செயற்பாடுகளை முன்னெடுத்து எமது மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயில் இருந்து பாதுகாப்போம்.

**வைத்திய கலாநிதி. ஆ. கேதீஸ்வரன்**
**பிராந்திய பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

## ஒப்பந்தகாரர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநருடன் ஒப்பந்தகாரர்களுடனான சந்திப்பு நாளை மறுதினம் சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

எனவே மேற்படி சந்திப்பில் யாழ். மாவட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை கட்டட வேலைகளினை மேற்கொண்டு வரும் சகல கட்டட ஒப்பந்தகாரர்களினையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளர் ஜீ.சிவபாலன் அறிவித்துள்ளார். (சு)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (ICT), பொதுத் தகவல் தொழில்நுட்பம் (GIT) ஆகிய பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் சகல ஆசிரியர்களும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (சு)

## இலங்கை கடற்படை தாக்குதல் இராமேஸ்வரம் மீனவர்கள் தப்பியோட்டம்

(இராமேஸ்வரம்)

நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் மீன் பிடிக்க விடாமல் தடுத்து விரட்டியடித்தனர்.

இதனால் பலத்த நஷ்டத்துடன் மீனவர்கள் கரைக்குத் திரும்பினர் என தமிழக செய்திகள் தெரிவித்தன.

இராமேஸ்வரத்தில் இருந்து 4ஆம் திகதி சுமார் 300 இந்திய மீனவர்கள் விசைப் படகுகள் மீன் பிடிக்கச் சென்றன.

இந்தப் பட குகள் இந்திய இலங்கை கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு 4 போர்க்கப்பல்களில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர்.

இதனால் மீனவர்கள் திசைமாறி வேறு இடங்களுக்குச் சென்று மீன் பிடித்தாலும் அங்கும் விரைந்து வந்து இலங்கை கடற்படையினர் விரட்டினர்.

இதனால் மீனவர்கள் பெரும் நஷ்டத்துடன் கரைக்குத் திரும்பினர்.

இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதல் காரணமாக இராமேஸ்வரம் தீவு மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலையில் வீட்டில் முடங்கிக் கிடக்கின்றனர் என தமிழகச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

(எ-4)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணத்தில் நடமாடும் நூலக சேவை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 'GODS OWN CHILDREN FOUNDATION' இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடனும் யாழ். பொது நூலகத்தின் ஆதரவுடனும் வழிகாட்டலுடனும் நட மாடும் நூலக சேவையினை நடத்தவுள்ளது. இந் நடமாடும் நூலக சேவையின் ஆரம்ப வைபவம் இன்று காலை 9 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ் நடமாடும் நூலக சேவையானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படும். யாழ்.பொது நூலகத்தினால் ஒருவா ரத்திற்கு இரு முறை வீதம் ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் தனது சேவையை வழங்கவுள்ளது.

இந்த சேவையின் ஆரம்பத்திட்டம் 6 மாதங்களுக்கானது. இதன் மூலமாக யாழ். மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங் களைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பாடசாலைகளை ச்சேர்ந்த ஆயிரக்கணக் கான மாணவர்கள் பயன்பெறுவார்கள். இவ் நட மாடும் நூலக சேவையானது அனைத்து சிறார்களுக்கும் ஒரு முன்னணி நூலக சேவையாக செயற் படும்.

இந்த முயற்சியின் முக்கிய நோக்கமானது பாட உசாத்துணை நூல்களுக்கும் பதிப்பகங்களுக்கும் தொடர்பற்றவர்களையோ குறைந் தளவிலான தொடர்புடையவர்களையோ தொடர்பு படுத்துவதாகும். மேலும், இது கல் வியின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் உணர்த்துவதுடன் சிறார்கள் மத்தியில் மட்டுமல்லாது அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கும் வாசித்தல் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்கும் ஒரு முயற்சியாகும்.

கடந்த வருடம் முடிபுற்ற போரினால் நேரடியாகயே மறை முகமாகவோ பாதிக்கப்பட்ட பெருந்தொகையான குழந்தைகளின் அறிவினை மேலும் விருத்தி செய்வதற்கான இன்னொரு சந்தர்ப்பமாகவும் இது அமையும்.இந்நிகழ்வு தவிர ஐரோப்பிய ஒன்றியம் குழந்தைகளுக்கு உதவுவதை நோக்க மாகக் கொண்ட ஏனைய பல செயற்றிட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்கின்றது.

சிறுவர்களுக்கென கொண்டாடப்படும் ஒக்டோபர் முதலாம் திகதியில் மட்டுமல்ல தொடர்ந்தும் நாம் சிறுவர்களுக்காற்றும் சிறந்த பணியானது. சிறந்த கல்வி, தெளிவான சிந்தனை, தனித்திறன் வளர்ச்சியில் காட்டும் அக்கறை, சமூக விழுமியங்கள் கொண்ட வாழ்வியல் வழிகாட்டல் என்பன அவர்களின் எதிர்கால வாழ்வில் சமூக கட்டுப் பாடுகளிற்கும் அபிவிருத்திக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கும் வகையில்உருவாக்கப்படுவார்கள்என்பதுதிண் ணம்.

1954 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொது கூட்டமைப்பு நவம்பர் மாதம் 20 ஆம் திகதியினை உலகளாவிய சிறுவர் தினமாக ஏற்றுக் கொண்டது. இது அனைத்தும் நாடுகளிலும் சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்கும் உலகச் சிறுவர்களின் நலனை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக அமைந்தது. அன்றிலிருந்து சிறுவர் தினமானது பல நாடுகளிலும் பல்வேறு தினங்களில் கொண்டாடப்படுகின்றது. (எ)

## கைதிகளின் ஆடை அணிந்து...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)



சிறையில் அடைக்கப்பட்ட பொன்சேகாவை அவரது மனைவி அனோமா சென்று சந்தித்தார். அவரிடம் தான் அணிந்திருந்த தேசிய ஆடையையும் இதுநாள்வரைபயன்படுத்திக்கொண்டிருந்த கறுப்பு பையையும் கொடுத்தார் பொன்சேகா. கணவனின் நிலையை கண்டு கதறிய அனோமாவிடம் தனது அறையைப் பற்றியும் தூக்கமலில்லா இரவுகளையும் தெரிவித்திருக்கிறார் நொந்துபோய். பொன்சேகாவை சந்தித்துவிட்டு வெளியே வந்த அனோமா, "ஒரு போர் வீரனாக நின்று இந்த நாட்டை மீட்டுக்கொடுத்த என் கணவருக்கு கடைசியில் மிஞ்சியது ஒரு அலுமினியத் தட்டும் ஒரு டம்ளரும்தான்.அந்த நிலையைப் பார்க்க முடியவில்லை. காற்று வசதியில்லா மலும் எறும்புக் கூடியிலும் கொடுமையை அனுபவிக்கிறார் என் கணவர். அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள அறை சுகாதாரமின்றி அசுத்தமாக இருக்கிறது. இதற்கெல்லாம் இந்த அரசாங்கம் விரைவில் பதில் சொல்லியே ஆக வேண்டும்" என்றார்.


பொன்சேகாவை ஆதரிக்கும் சிங்களக் கட்சியான ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி, "பொன்சேகாவை பார்த்து அச்சம் கொண்டுள்ளது இந்த அரசு. அதனால் தான் நீதிமன்றத் தீர்ப்பில் அவசர அவசரமாக ஒரு முடி வெடுத்து அவரை வெலிக்கடை சிறையில் அடைத்திருக்கிறார் ஜனாதிபதி" என்கிறார்.ஆனால் மற்றொரு சிங்களக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் செய்தித் தொடர்பாளர் நிசாந்தஸ்ரீவர்ண சிங்க, " இந்த தண் டனை பொன்சேகாவிற்கு சரியான, நியாயமான தண்டனைதான். இவர் இராணுவ தளபதியாக இருந்தபோது இராணுவ அதிகாரிகள் பலருக்கும் இதே போல தண்டனை கொடுத்திருக்கிறார். அதே சட்டத்தில்தான் இவருக்கும் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்கிறார்.

இதற்கிடையே, " குற்றங்களை ஒப்புக்கொண்டு பொன்சேகா மன்னிப்புக் கேட்கட்டும். அவருக்குப் பொது மன் னிப்பு கொடுக்கத் தயாராக இருக்கிறார் ஜனாதிபதி ராஜபக்ஷ" என்கிறார் பொன்சேகாவின் தண்டனை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. ஆனால் அனோமா பொன்சேகாவோ, " என் கணவர் குற்றம் செய்யவில்லை. குற்றம் செய்யாத அவர் எதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும்? மன்னிப்புக் கேட்கமாட்டார்.அவைரக் கைது செய்து அடைத்ததற்காக இந்த அரசாங்கம் ஒருநாள் வருந்தப்போகிறது" என்கிறார் ஆவேசமாக.

இந்நிலையில் பொன்சேகாவின் இன்றைய நிலை அறிந்து, மகிழ்ச் சியைத் தெரிவிக்கும் ஈழத் தமிழர்," சர்வதேச நெறிகளுக்கு எதிராகவும் மனிதநேயமுமின்றியும் கொடூரமான யுத்தம் நடத்தி பல இலட்சக்கணக் கான மக்களைப் படுகொலை செய் ததில் முதல் குற்றவாளி மஹிந்த. இரண்டாவது குற்றவாளி பொன்சேகா. இரண்டாவது குற்றவாளிக்கு தண்டனை கிடைத்திருக்கிறது. அதேபோல முதல் குற்றவாளிக்கும் தண்டனை கிடைக்கும். அதிலிருந்து ஜனாதிபதி மஹிந்த தப்பிக்க முடியாது. கொன்றவனுக்கு தண்டனை என்றால் கொல்ல ஏவியவனையும் (ஜனாதிபதி மஹிந்த) நிச்சயம் காலம் தண்டிக்கும்" என்கிறார்கள்.

**கொழும்பிலிருந்து எழில்**




யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்ற ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவுக்கான பிரியாவிடை நிகழ்வில் விழா நாயகன் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் அவர் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்களையும் மேலுள்ள படத்திலும் யாழ்.நீதிமன்ற நீதவான் அ.அ.ஆனந்தராஜா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)


## வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
## கேள்வி அறிவித்தல் - 2010.

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் C10, C11 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 11.10.2010-18.10.2010 மு.ப 11.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19.10.2010 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 19.10.2010 பி.ப2.00 மணி (கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "செயலாளர், வலி. கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுமாறும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு எதிர்வரும் 19.10.2010ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப் படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப் படல் வேண்டும்.

குறிப்பு: கீழ்க்குறிப்பிடப்பட்ட வீதி வேலைகளுக்குரிய தார் பிரதேசசபையால் வழங்கப்படும்

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப்பணம் | வரி வற்12% NBT3% |
|---|---|---|---|---|
| 01. | நீர்வேலி பூதர்மடம் வீதி மீள்தாரிடல் | 7000.00 | 500.00 | 76.80 |
| 02. | புத்தூர் 9ஆம் கட்டை வீதி மீள்தாரிடல் | 2000.00 | 500.00 | 76.80 |
| 03. | இருபாலை தமிழ் கலவன் பாடசாலை வீதி மீள்தாரிடல் | 3000.00 | 500.00 | 76.80 |
| 04 | கோப்பாய் ஆஸ்பத்திரி வீதி திருத்தம் | 5750.00 | 500.00 | 76.80 |
| 05. | புத்தூர் மீன் சந்தை திருத்தம் | 2750.00 | 500.00 | 76.80 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
04.10.2010.

தம்பையா நடராசா,
செயலாளர்.

(சி-1357)


## அயோத்தி தீர்ப்பு சட்ட ரீதியாக இல்லை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொலிட் பீரோ கூட்டம் டிளல்லியில் நடந்தது.

கூட்டம் முடிந்ததும் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத் நிருபர்களிடம் கூறியதாவது,

அயோத்தி தொடர்பாக அலகாபாத் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு நம்பிக்கையின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியாக இந்த தீர்ப்பு இல்லை. நம் பிக்கையை வைத்து தீர்ப்பு கூறியிருப்பது ஆபத்தானது. இது ஒரு முன்மாதிரியாக அமைந்து விடும். ஒரு வழக்கு என்று வரும் போது அது சட்ட ரீதியாக சரியா? தவறா? என்றுதான் பார்க்க வேண்டும். அதை விட்டு மத நம்பிக்கையை மையமாக கொண்டு தீர்ப்பு அமையக் கூடாது.

இந்த வழக்கில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட விடயத்தை சேர்த்து பார்த்திருக்க வேண்டும். அது கிரிமினல் குற்றம். இது தனி வழக்காக நடந்தாலும் இந்த வழக்கிலும் அதையும் சேர்த்தே ஆய்வு செய்திருக்க வேண்டும். அயோத்தி பிரச்சினையில் நீதிமன்றத்துக்கு வெளியே தீர்வு காண முடியும் என்று கருதவில்லை. நீதிமன்றம் மூலம் இதற்கு தீர்வு காணலாம். சில கட்சியினர் இங்கு பெரிய அளவில் கோவில் கட்டுவது பற்றி பேசுகின்றனர். ஆனால் மசூதி கட்டுவது பற்றி பேசவில்லை. எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்த விடயத்தில் தலையிடுவது சரியாக இருக்காது. எனவே அரசியல் கட்சிகள் இதில் இருந்து விலகி இருக்க வேண்டும். மதசார்பற்ற ஒரு ஜனநாயக நாட்டில் சட்டம் தான் எல்லாவற்றையும் ஆட்சி செய்வதாக இருக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். (ச-5)


## காஷ்மீர் தீவிரவாதிகள் இருவர் சுட்டுக்கொலை

காஷ்மீரில் தீவிரவாத தளபதிகள் இரண்டு பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். காஷ்மீர் மாநிலம் ரியாதி மாவட்டத்தில் உள்ள மகோர் காட்டில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. அந்த இடத்தை பாது காப்பு படையினர் சுற்றி வளைத்தனர். உடனே தீவிரவாதிகள் பொலிஸாரை நோக்கி சரமாரியாக சுட்டனர். பதிலுக்கு பொலிஸாரும் தாக்குதல் நடத்தினார்கள். இரு தரப்புக்கும் இடையே 2 மணி நேரம் கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ச-4)



ஐதராபாத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள துர்கா பூஜைக்கான சிலைகளை தயார் செய்யும் இறுதிப்பணி நடைபெறுவதை படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் தீவிரவாதிக்கு அமெரிக்காவில் ஆயுள் தண்டனை



(நியூயோர்க்)

அமெரிக்காவில் கார் குண்டு வைத்து பாகிஸ்தான் தீவிரவாதிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த மே மாதம் முதலாம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க்கில் மக்கள் பெருமளவில் கூடும் டைம்ஸ் சதுக்கத்தில் கார் குண்டு வைக்கப்பட்டது. தக்க நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் அக்குண்டு அகற்றப்பட்டது.

இதனால் நடைபெற இருந்த உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இது தொடர்பாக பைசல் ஷசாத் (31) என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் பாகிஸ்தானை சேர்ந்தவர். அமெரிக்க குடியுரிமை பெற்றவர். இவரது தந்தை பாகிஸ்தான் விமானப் படையில் கொமாண்டராக பணி புரிந்தவர்.

கைது செய்யப்பட்ட பைசல் ஷசாத் தலிபான் தீவிரவாதி ஆவார். கார் குண்டு வைப்பதற்கு சில நாட்க ளுக்கு முன்பு அவர் பாகிஸ்தான் சென்றிருந் தார். அங்கு தலிபான் தீவிரவாதிகளிடம் கார்க்குண்டு வைக்க பயிற்சி பெற்று அமெரிக்காவுக்கு திரும்பி இருந்தார். இந்த தகவல்கள் விசாரணையில் தெரிய வந்தன. இந்த நிலையில் பைசல் ஷசாத் மீது அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நீதிபதி பிரியம் கோல்டு மேன் செடார்பாம் முன்னிலையில் நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி செடார்பாம் குற்றம் சாட்டப்பட்ட பைசலுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இதற்கிடையே தீவிரவாத நடவடிக்கைக்காக அமெரிக்க நீதிமன்றில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 2 ஆவது பாகிஸ்தானியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த சில நாட்களுக்கு முன்பு அபியா சித்திக் என்ற பெண் விஞ்ஞானிக்கு 86 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது. ஆப்கானிஸ் தானில் அமெரிக்க இராணுவ அதிகாரி கொல்லப்பட்ட வழக் கில் இவர் சம்பந்தப்பட்டு இருந்தார்.

(ச-4)

## சீனப்பெருஞ்சுவரை சிதைக்கும் சுற்றுலா பயணிகள்

(பீஜிங்)

சீனாவில் உள்ள சீனப்பெருஞ்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. உலக பாரம்பரிய சின்னமாக இதை யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இதை பார்ப்பதற்காக உலகம் முழுவதிலும் இருந்து ஆண்டு தோறும் ஒரு கோடி பேர் சீனாவுக்கு வருகின்றார்கள். இவர்கள் சீனப்பெருஞ்சுவரில் இருந்த படியே சாப்பிடுவது, சாப்பாடு கொண்டு வந்த கடதாசிகளை வீசுவது ,குளிர்பான போத்தல்களையும் மது போத்தல்களையும் அங்கேயே வீசிவிடுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் பெருஞ்சுவரின் பல பகுதிகள் குப்பைத் தொட்டிகள் போல காட்சிகள் அளிக்கின்றன.

பீஜிங் அருகே உள்ள படாலிங் என்ற இடத்தில் உள்ள சீனப்பெருஞ்சுவரில் சுற்றுலா பயணிகள் கூடாரம் அமைத்து இரவு வேளைகளில் படுத்து தூங்குகிறார்கள். இதற்காக அவர்கள் இரு கற்களுக்கு இடையே உள்ள சுவரில் ஆணி அடிப்பது போன்ற செயல்களையும் செய்கிறார்கள். இதனால் சுவர்கள் சேதம் அடைந்து உள்ளதாக தெரியவருகிறது.

(எ-4-2)




## உடையில் ஒட்டாத 'பபிள்கம்' விரைவில் விற்பனைக்கு வரும்



(லண்டன்)

பிரிட்டன் விஞ்ஞானிகள் ஒட்டாத பபிள்கம்மை உருவாக்கியுள்ளனர். பபிள்கம் பொதுவாக ஒட்டும் தன்மை கொண்டதாக உள்ளது. தற்போது உபயோகத்தில் உள்ள பபிள்கம் ஒருவகை மரப்பாலில் தயாரிக்கப்படுகிறது. இதனை மென்று விட்டு கண்ட இடங்களில் வீசுவதால் சுற்றுப்புறம் அசுத்தமாவதுடன் உடை உள்ளிட்ட பொருட்களிலும் எளிதாக ஒட்டிக்கொள்கிறது.

மேலும் கழிவறையில் துப்பும் போது கழிவு நீர் குழாய்களிலும் அடைப்பை ஏற்படுத்துகிறது. துணிகளில் ஒட்டிக்கொண்டால் எளிதில் அதனை எடுக்க முடிவதில்லை. அப்படியே எடுத்து விட்டாலும் இந்தக்கறை நிரந்தரமாக தங்கிவிடுகிறது.

தற்போது உபயோகத்தில் உள்ள பபிள்கம்முக்கு முற்றிலும் எதிராக புதிய வகை பபிள்கம்மை பிரிட்டன் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த பபிள்கம் பயன்படுத்திய பின் 24 மணிநேரம் வரை ஒட்டும் தன்மை இல்லாமல் இருக்கும். அதன் பின்னர் உடைகளிலோ மற்ற பொருட்களிலோ ஒட்டிக்கொண்டாலும் அதனை எளிதாக நீக்கிவிட முடியும்.

மேலும் இது தண்ணீரில் கரையும் தன்மை கொண்டதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே கழிவு நீர்க் குழாய்களில் அடைப்பையும் ஏற்படுத்தாது. புதினா, பெப்பர் மிண்ட் ஆகிய இரண்டு சுவை வாசனையில் இந்த பபிள்கம் கிடைக்கிறது.

அமெரிக்காவில் தற்போது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் பிரிட்டனில் இந்த பபிள்கம் விற்பனைக்கு வரும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

(ச-4-2)

## ரஷ்ய வாழ் விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கு நோபல் பரிசு

(ஸ்டாக்ஹோம்)

இயற்பியல் துறையில் ரஷ்ய வாழ் விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இயற்பியல் துறையில் சிறந்த கண்டுபிடிப்புகளை வழங்கியவர்களுக்கான அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

ரஷ்யாவை சேர்ந்த ஆண்ட்ரேஜிம்(51) கோன்ஸ்டான்டின் நொவோ செலோவ் (36) ஆகிய 2 பேருக்கு அறிவிக்கப்பட்டது.

இவர்கள் மிக மெல்லிய காபனை கண்டுபிடித்துள்ளனர். மேலும் அதில் இருந்து கிராபின் என்ற புதிய அணுவை உருவாக்கியுள்ளனர். இது மிக மெல்லிய மற்றும் கடத்தல் தன்மை வாய்ந்தது.

இது அறிவியல் உலகில் நடத்தப்படும் பரிசோதனைகளுக்கு உதவிக்கரமாக இருக்கும். நோபல் பரிசு பெறும் இவர்கள் இருவரும் இங்கிலாந்து மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். நொவோசெலோவ் இங்கிலாந்து மற்றும் ரஷ்யாவின் இரட்டை குடியுரிமை பெற்றவர். இதுவரை நோபல் பரிசு பெற்றவர்களில் மிகவும் இளையவர் ஜிம் நெதர்லாந்து குடியுரிமை பெற்றவர்.



(ச-4)

## சோதனை குழாய் குழந்தை உருவாக்கிய பிரிட்டன் டாக்டருக்கு நோபல் பரிசு

சோதனை குழாய் குழந்தை தொடர்பான ஆராய்ச்சியில் சாதனை படைத்த பிரிட்டன் டாக்டர் ராபர்ட் எட்வர்ட்சுக்கு இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைப் பேறில்லாத தம்பதியருக்கு மிகப்பெரிய வரப்பிரசாதம் சோதனைக்குழாய் குழந்தை.20 ஆண்டுகால தீவிர ஆராய்ச்சியில் உருவானது தான் சோதனைக் குழாய் குழந்தைத் திட்டம்.

கடந்த 1978 ஆம் ஆண்டு முதன்முதலாக சினைப்பைக்கு வெளியே கரு முட்டையை விந்தணுவுடன் சேர்த்து அதனால் உருவாகும் சினை முட்டையை மீண்டும் கருப்பையில் வைத்து குழந்தை பெறும் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் பிரிட்டன் டாக்டர் ராபர்ட் எட்வர்ட்ஸ்.

இவரது கண்டுபிடிப்பின் பலனாக இன்று உலகம் முழுவதும் 40 இலட்சம் பேர் செயற்கைக் கருவூட்டல் முறையில் குழந்தைப் பேற்றைப் பெற்றுள்ளனர். இன்று இந்த முறைக்கு அமோக வரவேற்பு இருந்தாலும் ஆரம்ப கட்டத்தில் இதற்குத் தேவாலயங்களும் பழைமைவாதிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்த னர்.

இதன் காரணமாக ராபர்டும் இவரது வழிகாட்டியான பேட்ரிக் ஸ்டெப்டோவும் தங்கள் ஆராய்ச்சித் திட்டத்துக்கு நிதி கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டனர். பேட்ரிக் ஸ்டெப்டோ 1988 இல் இறந்து விட்டார்.

மனித சமுதாயத்துக்கு பலனுள்ள ஆராய்ச்சியை மேற்கொண்ட ராபர்ட் எட்வர்ட்சுக்கு இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு இப் பரிசு மூலம் 7 கோடி ரூபாய் கிடைக்கும். இந்த சோதனை குழாய் குழந்தை என்பது, இன்று 30 வயது முதல் 39 வயதுடைய கருவுறாத பெண்களுக்கு வரப்பிரசாதம்.அதையும் விட முதலாவது சோதனை குழாய் குழந்தைக்கு வாரிசு, அதற்குப் பின் இம்முறையில் பிறக்கும் குழந்தைகளுக்கு வாரிசு என்பது தொடர்கிறது. அதிலும் இச் சோதனை முறையில் பாதிப்பு மற்றும் பின் விளைவுகள் இல்லாததால் இதை எல்லாரும் இன்று போற்றிப் புகழும் நடைமுறையாக இருக்கிறது.



ஆங்கிலத்தில் இன் விட்ரோ பெர்டிலைசேஷன் என்றும் சுருக்கமாக ஐ.வி.எப். என்று அழைக்கப்படும் இந்த நடைமுறையில் உள்ள அம்சங்களை ஏதாவது ஒரு விடயத்தில் ஆறு தம்பதிகளில் ஒருவர் இன்று பின் பற்றுகிறார் என்பது மருத்துவ உலகில் கூறப்படும் தகவல். ஆண்டு தோறும் முதலில் மருத் துவ நோபல் பரிசு அறிவிக்கப்படும். அதற்குப் பின் மற்றை துறைகளில் சிறப்பு பெற்றவர்களுக்கான பரிசுகள் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

## இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அரசு பயிற்சியளித்தது

### முஷரப் தகவல்;அரசு மறுப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப். தற்போது இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வசித்து வரும் அவர் ஒரு ஜெர்மனி பத்திரிகைக்கு பேட்டி அளித் துள்ளார். இதில் காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிராக யுத்தம் நடத்துவதற்கு தீவிரவாத குழுக்களை பாகிஸ்தான் உருவாக்கியது.

அவர்களுக்கு பயற்சி அளித்து இந்தியாவுக்குள் அனுப்பினோம். ஐ.நா. சபையில் இந்த பிரச்சினை குறித்து விவாதிக்க இந்தியா தயாராக இல்லாதபோது எந்த ஒரு நாடும் தன் சொந்த நலனுக்காக இப்படிப்பட்ட குழுக்களை உருவாக்க அதற்கு உரிமை உள்ளது என்று கூறியிருந்தார்.

முஷராப்பின் இந்த கருத்துக்கு பாகிஸ்தான் அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்நாட்டின் வெளியுறவுத் துறை அலுவலக செய்தி தொடர்பாளர் அப்துல் பாசித் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

என்ன காரணத்துக்காக முஷரப் அவ்வாறு தெரிவித்தார் என தெரியவில்லை. ஏனெனில் தற்போது அவர் பாகிஸ்தானில் இல்லை. அவரது கருத்து முட்டாள் தனமானது.ஆதாரமற்றது.

அவரது இந்த அடிப்படையற்ற கருத்தை பாகிஸ்தான் கடுமையாக மறுக்கிறது.அதே நேரத்தில் காஷ்மீர் மக்களின் போராட்டத்துக்கு பாகிஸ்தான் ஆதரவாக உள்ளது என்றார்.

(ச-2)

பணத்திற்காவும் வெற்றிக்காகவும் என்னு
டைய ஆன்மாவை நான் விற்பதில்லை.
-நாராயணமூர்த்தி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஏமாற்றாதே ஏமாற்றாதே! ஏமாறாதே ஏமாறாதே!

"மானிட வாழ்வென வாழ்வென நொந்து..." இந்தப் பாடல் வரிகள் பட்டினத்தடிகளுக்கு உரித்தானவை.

மானிட வாழ்வில் இறுதிக்கால சோகத்தை அனுபவ வாயிலாக உணர்ந்து பாடப்பெற்ற இந்த வரிகளை ஈழத் தமிழ் மக்கள் பல வருடங்களாக அனுபவித்து கண்ணீர் விடுகின்றனர்.

இடப் பெயர்வுகள், சொத்தழிவுகள், உயிரிழப்புக்கள், காணாமல் போனவர்களின் சோகங்கள், ஊனங்கள், முட்கம்பி முகாம்கள், குடிசை வாழ்வு இப்படி எத்தனையே சோகங்கள் எங்கள் வாழ்வை நாசம் செய்துவிட்டன.

முற்றுப் பெறாத தொடர் சோகமாக இருக்கும் இத் துன்பியலில் இருந்து விடுபடுவதற்கான வழியை இறைவனே வகுத்தருள வேண்டும்.

அந்த நம்பிக்கையைத் தவிர தமிழ் மக்களிடம் வேறு எதுவும் இல்லை.

முப்பது ஆண்டுகால யுத்தமும் இனப் பிரச்சினையும் மட்டுமே எங்கள் வாழ்வை நிர்மூலமாக்கின எனின் அது மகாதவறு. யுத்த கால சூழலை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட அரசியல்வாதிகள், குறிப்பிட்ட வர்த்தகர்கள் மற்றும் சுத்துமாத்தையே சுயதொழிலாகக் கொண்டவர்கள் எனப் பலரும் பொய் வாக்குறுதி அளித்து எங்களை ஏமாற்றி சுயலாபம் அடைந்தனர்.

இப்போது கூட தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் வெறுமையானவையாக அரசியலின் வியூகம் அமைக்காமல் வெற்று வார்த்தைகளை உச்சாடனம் செய்பவர்களாக மட்டுமே இருக்கின்றனர்.

இதற்கு அடிப்படைக் காரணம், அவர்களிடம் தமிழ் மக்கள் மீது பற்றில்லை; இரக்கமில்லை. அரசியலில் இதெல்லாம் சகஜம் அப்பா! என நடிகர் கவுண்டமணி சொல்வது போல இவர்களின் மனநிலை உள்ளது.

இதனால் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழினத்தை எதிர்காலத்தில் தலையெடுக்க விடாமல் தடுப்பதற்காக முன்னெடுக்கும் திட்டங்கள் முழுமையாக அரங்கேறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

இதற்கு மேலாக இப்போது சுத்துமாத்துப் பேர் வழிகளும் எங்களை ஏமாற்ற புறப்பட்டு விட்டனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உள்நாடில் தொழில் வசதி, கல்விச் சான்றிதழ்கள் என்ற போலி விளம்பரங்களோடு இவர்கள் படையெடுத்திருப்பதை அப்பாவித்தனமாக அறியாதிருப்பின் அதனால் உள்ளதையும் இழக்கும் பரிதாபம் ஏற்படும்.

ஆகவே எதிலும் விழிப்பு வேண்டும். வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்யும் பொருட்களின் தரம், தன்மை, காலாவதியாகும் திகதி, விலை என்பன முதல், போலி வாக்குறுதிகள் வரை எதிலும் நாம் விழிப்பாக இருப்பதே துன்பக் கடலில் நாம் வீழ்வதைத் தடுப்பதற்கான ஒரே வழியாகும்.

# இலங்கைக்கு 10 மில். யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம்

இலங்கைக்கு பத்து மில்லியன் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்ட போதிலும் பல்வேறு நெருக்கடி நிலைமைகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக தங்குமிடம் மற்றும் நிலக் கண்ணிவெடி ஆகிய பிரச்சினைகளை இடம் பெயர் மக்கள் எதிர் நோக்கி வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 13 மில்லியன் யூரோ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் மனிதாபிமான உதவி மற்றும் சிவில் பாதுகாப்பு ஆணையாளர் கிறிஸ்டினா ஜோர்ஜியா தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு தொடர்ச்சியாக உதவிகளை வழங்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம் பெயர் மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ள போதிலும் இன்னமும் பாரிய அளவு முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தங்குமிடம், உணவு, சுகாதாரம், குடிநீர் போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்க வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு முதல் இது வரையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான மனிதாபிமான உதவியாக 58 மில்லியன் யூரோக்களை வழங்கியுள்ளது. (ச-5)

# சவுதியில் வேலைவாய்ப்பு இழப்பு! கட்டாரை நாடும் இலங்கையர்கள்

இலங்கையிலிருந்து ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கான வேலை வாய்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில்லை என சவுதி அரேபியா கூறியுள்ளதால் வேலை தேடும் இலங்கையர்களில் அதிகமானோர் கட்டாரை நாடலாம் என கட்டார் தலைநகர் டோகாவிலுள்ள ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்கள் தெரிவித்துள்ளதாக கட்டார் பெனின்சுலா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சவுதி அரேபியாவிற்கு செல்வதற்கான கதவுகள் மூடப்பட்டால் வேலை வாய்ப்பு தேடி டோகாவிற்கு ஊழியர்கள் திரும்பலாம் என நம்புவதாக டோகாவிலுள்ள இலங்கை ஆட் சேர்ப்பு முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கட்டாரில் பல வேலை வாய்ப்புகள் இருப்பதாகவும் அங்கு எந்தவித பிரச்சினையும் இல்லை எனவும் டோகாவிலுள்ள அந்த முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கை பணியாளர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதை தவிர்க்குமாறு தனது நாட்டின் தனியார்ஆட்சேர்ப்பு அலுவலகங்களிடம் சவுதி அரேபியாவின் தேசிய ஆட் சேர்ப்பு குழு கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி விடயம் தொடர்பில் எந்த வித தகவலும் தமக்கு கிடைக்கவில்லை என டோஹாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஆலோசகர் ஏ.தர்மகுலசிங்கம் கூறினார். (ச-5)

# சட்டவிரோதமாக கைதிகளை தடுத்து வைத்துள்ள நாடு இலங்கை

உலகில் அதிகளவு கைதிகள் சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாக இலங்கை திகழ்வதாக ஜனநாயகத்திற்கான பல்கலைக்கழக விரிவுரையாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதில் 8 ஆயிரம் கைதிகள் அடங்குவதாக ஜனநாயகத்திற்கான பல்கலைக்கழக விரிவுரையாளர் அமைப்பின் உறுப்பினர் பேராசிரியர் குமார் டேவிட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜூரிகள் பேரவையினால் இந்தப்புள்ளிவிபரத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு இன்று!

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களில் டிப்ளோமாப் பயிற்சி நெறிக்காக விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

இதில்யாழ்ப்பாணப் பிரிவு-பிற்பகல் 1.00 மணிமுதல் 1.30 மணிவரையும், கோப்பாய்ப் பிரிவு- 1.30-2.30 மணி வரை, நல்லூர் பிரிவு- 2.30-3.30 வரை இந் நேர்முகத் தேர்வு யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவிருப்பதால் மேற்குறித்த நேரத்தில் இந் நேர்முகத் தேர்வுக்கான ஆவணங்களுடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (ச)

# கல்விச் சுற்றுலா கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அதிபர்களுக்கான கல்விப் பரிமாற்றச் சுற்றுலா சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை வலயக்கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு இடம் பெறும்.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் தவறாது பங்கேற்க வேண்டுமென யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

# பட்டமளிப்புக்குச் செல்லும் ஏ.ரி.ஐ. மாணவர்களுக்கு


(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்பவியல் நிறுவனப் பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து பட்டம் பெறவுள்ள யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பழைய மாணவர் சங்க தலைவர் செ.செல்வவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கல்விகற்று பட்டம் பெறவுள்ள சகல மாணவர்களும் குறித்த நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்சங்க செயலாளர் வி.தயாபரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இம் மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கடவுளின் கரங்களில் உங்களை ஒப்படைத்து விடுங்கள்-பாபா

வெற்றியோ,தோல்வியோ அவன் அளிக்கட்டும். அதனாலென்ன? அவர் உங்களைச் சிரமப்படுத்துவதில் உறுதியாயிருக்கலாம். முடிவில் பார்க்கும் போது அது உங்கள் நன்மைக்காகவே கூட இருக்கலாம். உங்களால் எப்படி அதை அறிந்து கொள்ள முடியும்? நீங்கள் யார் அதை அறிய? சிறப்பாகச் செயல் புரிந்து விட்டுச் சும்மாயிருங்கள்! நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழ புதிய வீடுகள் கட்டிக் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். அங்கே கடவுளைப் பிரதிஷ்டை செய்து வைக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன். நான் சொல்லுவது செங்கல் , சுண்ணாம்பு , வீடு அல்ல , நல்ல எண்ணங்கள் , நல்ல சொற்கள் , நல்ல செயல்கள் , நல்ல சுற்றம். அங்கே நீங்கள் அமைதியாக வாழ இயலும். அனைவரும் கூட்டாக அந்த வீடு கட்டி கிரகப்பிரவேசத்திற்கு என்னை அழைக்க முடியும். நான் ஆர்வமுடன் இசைவேன். அவ்வீடுகள் என்னுடையவை. நான் வந்து உள்ளே நுழைய அழைப்பு கூடத் தேவையில்லை. 'ஆன்மீக ஆனந்தத்துக்கான வீடு அது! என் இருப்பிடம் என்னை விரும்பும் தூய இதயம் தான்.



பக்தி உள்ளத்தைத் தூய்மைப் படுத்தும். கடவுளின் கருணையைக் கொண்டு வரும். மேகங்கள் திரண்டு வயல்கள் மீது மழை பொழிய வேண்டும். உயிரூட்டும் நீரைத் தாவரங்கள் மேலெழுந்து பருக முடியாது. பக்தி கடவுளைக் கீழே நம்மிடம் கொண்டுவரும் ஆற்றல் பெற்றது.

பக்தன் தன் உடல் , மனம் , வாழ்வு அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டால் அவர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். ஏனென்றால் அவர் எப்போதும் நம்முடனேயே இருப்பார்.

ஜெய் சாய்ராம்

Sampath Pubudu — Children's Savings Account
Sampath சபிரா
சிறந்த நன்மைகளுடனான சிறுவர் சேமிப்புக் கணக்குகள்

X SET
வளமான எதிர்காலத்தினை இளையதலைமுறைக்கு வழங்கும் சேமிப்புக் கணக்கு

Sampath DOUBLE S சேமிப்புக் கணக்கு
ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு போனஸ் வட்டி வழங்கும் சேமிப்புக் கணக்கு

Sampath Hit Saver — HIGHEST INTEREST TODAY
ஸ்ரீலங்காவில் அதிகூடிய வட்டி வழங்கும் சேமிப்புக் கணக்கு

Sampath Sanhinda Saver
முதியோர் - சேமிப்புக் கணக்கு
50 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு மாதத்திற்கு இரண்டு முறை வட்டியுடன் இன்னும் பல சலுகைகளை வழங்கும் ஒரே சேமிப்புக் கணக்கு.



## மிகுதியான சோறு

தேவையானவை
1. விரயம் செய்யாதவற்றில் சொற்பம்
2. தூர நோக்கு சேமிப்பு சிந்தனையில் ஒரு துளி

எமது முன்னோர்கள் மிஞ்சிய சோற்றினை காயவைத்து, இடித்து உருசியான அரிசி உருண்டை செய்வார்கள். அதற்கு தேவையான தூர நோக்கு சேமிப்பு பழக்கத்தினை அவர்கள் கொண்டிருந்தார்கள். அப்படியான பாரம்பரியத்தினை கொண்ட உங்களுக்கென பல சேமிப்பு முறைகள் எமது சம்பத் வங்கியிலுள்ளன. எனவே இந்த சேமிப்பு மாதத்தில் உங்கள் எதிர்காலத்தின் பொருட்டு சேமிக்க ஆரம்பிப்போம்.


சம்பத் வங்கி - உங்களுக்கான சேமிப்பகம்

Sampath Bank PLC - Company No. PQ 144   Grant McCann

www.sampath.lk   Sampath Bank Fitch Ratings AA-(lka)   தொலைபேசி இலக்கம்: 0112 30 30 50

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank





தேசியக் கல்வியியல் டிப்ளோமா பெற்ற ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆசிரியர் ஒருவருக்கு நியமனம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# ஐ.சி.சி. விருதுகள் அறிவிப்பு

## சிறந்த கிரிக்கெட் வீரர் விருது; சச்சின் டெண்டுல்கர் வென்றார்



(பெங்களூர்)

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதினை இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் வென்றுள்ளார்.

பெங்களூரில் நேற்று நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவை விருது வழங்கும் விழாவில் சச்சின் டெண்டுல்கர் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான கார்ல் சோபர்ஸ் விருதினைப் பெற்றுக் கொண்டார்.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் மற்றும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வீரர் ஆகிய விருதுகளுக்காகவும் சச்சின் டெண்டுல்கரின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஆண்டின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருதினை இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் விரேந்திர சேவாக்கும், சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதினை தென்னாபிரிக்காவின் ஏ.பி.டி. வில்லியர்சும் பெற்றுக்கொண்டனர்.

கடந்த பருவ காலத்தில் இந்தியஅணி மிகச் சிறந்த திறமையை வெளிப்படுத்தியதாகவும் டெஸ்ட் கிரிக்கெட் தர வரிசையில் முதனிலையை எட்டியதாகவும் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 மாதங்களாகவே இந்திய அணி சிறந்த திறமைகளை வெளிப்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதிற்காக தென்னாபிரிக்காவின் ஹசீம் அம்லா, இங்கிலாந்தின் கிரகம் சுவான் மற்றும் இந்தியாவின் விரேந்திர சேவாக் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதினை ராகுல் டிராவிட், அன்று பிளின்டொப், ஜக் கலீஸ், ரிக்கி பொன்டிங், மிச்சல் ஜோன்சன், மற்றும் சிவ்நாராயன் சந்தர் போல் ஆகியோர் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி முதல் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட்



மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அணிகள் மற்றும் வீரர்கள் வெளிப்படுத்திய திறமைகளின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் பேரவை இந்த விருது வழங்கும் விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக குவாலியூவில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள்



போட்டியில் உலகின் முதலாவது இரட்டைச் சதத்தை சச்சின் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் டெஸ்ட் அணியின் தலைவராக மகேந்திர சிங் தோனி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி, வீரேந்திர சேவாக், குமார் சங்கக்கார, கிரஹம் சுவான், சச்சின் டெண்டுல்கர், ஹசீம் அம்லா, சைமன் ஹட்டிச், டெல் ஸ்டெய்ன், ஜக் கலீஸ், டக் புலின்ஜர் மற்றும் ஜேம்ஸ் அன்டர்சன் ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சர்வதேச ஒருநாள் அணியின் தலைவராக ரிக்கி பொன்டிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரிக்கி பொன்டிங், டெண்டுல்கர், மைக் ஹஸி, ஷேன் வோட்சன், ஏ.பி.டி.வில்லி யர்ஸ், தோனி, டானியல் விக்டோரி, ஸ்டு வேர்ட் போர்ட், பொல் லிங்கர் மற்றும் ரயன் ஹரிஸ் ஆகியோர் ஒருநாள் அணியில் உள் ளடக்கப்பட்டுள்ளனர்.

இருபது-20 போட்டிகளின் சிறந்த வீரராக நியுசிலாந்தின் பிரன்டன் மெக்கலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டின் சிறந்த நடுவராக பாகிஸ்தானின் அலிம் தார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஒரு நாள் தொடர் ஆஸி. அணியில் பொன்டிங், வோட்ஷன், ஜோன்சன் ஓய்வு

இந்திய அணியுடனான ஒருநாள் டெஸ்ட் தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் பொன்டிங், வோட்சன், ஜோன்சன் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி 2 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் முதல் போட்டி எதிர் வரும் 17ஆம் திகதி கொச்சியிலும் 2ஆவது போட்டி 20ஆம் திகதி விசாகப்பட்டினத்திலும் 3ஆவது போட்டி 24ஆம் திகதி கோவாவிலும் நடக்கிறது.

ஒருநாள் தொடருக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங், சகலதுறை வீரர் வோட்ஷன், வேகப்பந்துவீச்சாளர் ஜோன்சன் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று பேருக்கும் ஓய்வு கொடுக்கப் பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய தேர்வுக் குழு அறிவித்துள்ளது.

ஆசஷ் தொடர் மற்றும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய தேர்வுக்குழுத்தலைவர் அன்ரு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் அவுஸ்திரேலிய அணி விபரம்,

மைக்கெல் கிளார்க் (அணித்தலைவர்), கமரூன் வையிட் (துணைத்தலைவர்), ஷேன் மார்ஸ், மைக்கெல் ஹசி, டிம்பெய்ன், ஹேறாப்ஸ், பொல்லிங்கர், பெர்குசன், ஹயூரிச், மக்கய்ன், பேடின்சன், ஸ்டீவ்சிமித், மைக்கெல் ஸ்டார்க், வோர்னர்.

## ஜப்பானியர் இருவர் மற்றும் அமெரிக்கருக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு

(ஸ்டாக்ஹோம்)

2010 ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசை ஜப்பானின் ஆராய்ச்சியாளர்கள் எய்-இய்ச்சி நேகிஷி, அகிரா சுஸுகி மற்றும் அமெரிக்காவின் ரிச்சர்ட் ஹெக் ஆகிய மூவரும் கூட்டாக வென்றுள்ளனர்.

இதனை செய்தியாளர்களிடம் நேற்று அறிவித்த சுவீடன் அக்கடமி, மருந்து மற்றும் மின் துறைசார்ந்த பொருட்களைத் தயாரிப்பதற்கு மிகுந்த உறுதுணை புரியும் வகையில் வேதியில் மூலக் கூறை உருவாக்கியதற்காக இம் மூவருக்கும் வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் அதிக அளவிலான மருந்துப் பொருட்கள் மற்றும் மின் சாதனங்கள் தயாரிப்பில் வேதியியல் ஆராய்ச் சியாளர்களுக்கு பேருதவியாகத் திகழும் பல்லேடியம் வினையூக்கிகள் தொடர்பாக ஆழமான ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டதற்காகவும் இந்த ஆண்டு வேதியியல் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

புற்று நோய் மருந்துகள் தொடர்பாக மருத்துவ விஞ்ஞானிகள் சோதனை செய்வதற்கு இந்த வேதியியல் மூலக்கூறு உறுதுணையாக உள்ளது.

மேலும் கணனித் திரைகளை மிக மெல்லியதாக உருவாக்குவதற்கும் இந்த வேதியியல் முறை வழிவகுக்கிறது என சுவீடன் அக்கடமி தெரிவித்துள்ளது.

வேதியியல் நோபலை பகிர்ந்து கொள்ளும் அமெரிக்க வேதியியல் விஞ்ஞானி ரிச்சர்ட் ஹெக் (வயது 79) அமெரிக்காவின் டெலவெயர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

ஜப்பானைச் சேர்ந்த நெகேஷி (வயது 75)இண்டியாவிலுள்ள பல்கலைக்கழகத்தில் வேதியியல் பேராசிரியராகவுள்ளார்.

ஜப்பானைச் சேர்ந்த மற்றொரு ஆராய்ச்சியாளர் சுஸுகி (வயது80) ஜப்பானிலுள்ள ஹொக்கைடோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றுகிறார்.

சுவீடன் அறிவியலாளரும் டைனமட்டைக் கண்டுபிடித்தவருமான ஆல்பர்ட் நோபலின் நினைவாக வழங்கப்படும் நோபல் பரிசுகள் அவரது நினைவு நாளான டிசம்பர் 10 ஆம் திகதியன்று வழங்கப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் நிகழ்வில் எய்-இய்ச்சி, நேகிஷி, அகிரா சுஸுகி மற்றும் ரிச்சர்ட் ஹெக் ஆகிய மூவருக்கும் வேதியியல் துறைக்கான நோபல் தங்கப் பட்டயத்துடன் சுமார் 7 கோடி ரூ.பரிசுத் தொகையும் பகிர்ந்து வழங்கப்படும். (ச-5)

## காமன்வெல்த் போட்டியில் இந்தியா 2வது இடம்

காமன்வெல்த் போட்டியில் இந்தியாவின் பதக்க வேட்டை தொடர்கிறது. நேற்றைய 3ம் நாள் ஆட்டத்தில் 6 தங்கம் வென்ற இந்தியா, பதக்கப்பட்டியலில் 2வது இடத்தில் நீடிக்கிறது. துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், பளுதூக்குதல் உள்ளிட்ட போட்டிகளில் பதக்கங்கள் குவிகிறது. டென்னிஸ், பட்மின்டனில் அடுத்த சுற்றுக்கு இந்திய நட்சத்திரங்கள் முன்னேறியுள்ளனர்.

டில்லியில், 19வது காமன்வெலத் போட்டி நடக்கிறது. இதில் நேற்று நடந்த "கிரிக்கோ-ரோமன்' 55கி.கி, எடைப் பிரிவு மல்யுத்தப் போட்டியில், ராஜேந்தர் குமார் சிறப்பாக விளையாடினார். தகுதிச் சுற்றில் இலங்கையின் யபரத்னாவை வீழ்த்திய ராஜேந்தர் (14:0), அரையிறுதில் கனடாவின் பிராமிஸ் வெங்காவை 11:0 என வீழ்த்தி, இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.

இதில் ராஜேந்தர், பாகிஸ்தானின் அசார் ஹீசைனை எதிர்கொண்டார். இதில் முழுதிறமையை வெளிப்படுத்திய ராஜேந்தர், 11:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தங்கம் வென்றார்.

ஆண்களுக்கான 69 கி.கி, எடைப்பிரிவு பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் ரவி குமார் தங்கம் வென்றார்.

# பொன்சேகா விடயத்தில் ஊடகங்கள் எழுதவில்லை

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

எந்தவொரு ஊடகமும் சரத் பொன்சேகாவுக்கு எதிரான மகிந்த அரசாங்கத்தின் பழிவாங்கலை எழுதவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகங்களை அச்சத்துக்குள் அரசாங்கம் சிறை வைத்துள்ளது. எனவே இன்று அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்ட முடியாமல் போயுள்ளது. ஜனாதிபதியுடன் தான் தேநீர் அருந்தவில்லை, அரசாங்கத்தின் சர்வாதிகார ஆட்சிப் பயணத்திற்கு எதிரான பாரியதிரையாக ஐக்கிய தேசியக் கட்சி விளங்குகிறது. ஆனால் இன்று அனைத்து ஊடகங்களும் எம்மை விமர்சிக்கின்றன.

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அதைப் பலரும் பலவாறாக விமர்சித்தார்கள். நான் ஜனாதிபதியுடன் தேநீர் அருந்தவில்லை. ஆனால் எந்தவொரு ஊடகமும் சரத் பொன்சேகாவுக்கு எதிரான மகிந்த அரசாங்கத்தின் பழிவாங்கலை எழுதவில்லை எனக் குறிப்பிட்டார். (ச-5)

# வெள்ளைக்கொடி விவ...

தரப்பில் பிரதம சாட்சியாளரான. ஊடகவியலாளர் பிரட்ரிக்கா ஜேம்ஸிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

சரத் பொன்சேகாவுடனான, நேர்காணலின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பிலான, செய்தியை தாம் பிரசுரித்ததாக ஊடகவியலாளர் பிரட்ரிக்கா ஜேம்ஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த நேர்காணலை தாம் ஒலிப்பதிவு செய்யவில்லை என்பதையும், அவர் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டார். முக்கியமான நேர்காணலின் போது அவற்றை தாம் ஒலிப்பதிவு செய்வது வழமையான தாகும் என்றும் அன்றைய தினம் ஒலிப்பதிவுக் கருவி தம்மிடம் இருக்கவில்லை என்பதால் விடயங்களைக் குறித்துக் கொண்டபின்னர் செய்திக்கான கட்டுரையை தயாரித்ததாக பிரட்ரிக்கா ஜேம்ஸ் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார் (ச-3)

# உருத்திரகுமாரனின் பாது...

தமிழீழ அரசின் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டுள்ள அவர் வெளிநாடுகளிற்கு பயணம் செய்கின்ற போது அவரிற்கு ஏற்படக்கூடிய பாதுகாப்புச் சிக்கல்களையே அமெரிக்கா கருத்திலெடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ சட்ட ஆலோசகராக அதன் தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்பட்டு அந்தப் பணியில் தொடர்ந்து இருந்து வரும் உருத்திரகுமாரன் நோர்வேஜிய அனுசரணைப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள பிரபாகரனால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் முன்னாள் யாழ். மேயரான அமரர் விஸ்வநாதனின் மகனாவார்.

இவர் -விடுதலைப்புலிகளிற்கு சார்பான பல வழக்குகளை அமெரிக்க நீதிமன்றங்களில் தாக்கல் செய்து வாதிட்டவர் என்பதோடு வரலாற்றுப் பதிவுள்ள கனடிய சுரேஸ் மாணிக்கவாசகம் வழக்கிலும் ஆஜராகியவராவார்.

நாடுகடந்த தமிழீழ அரசு சர்வதேச அளவில் ஏற்படுத்தப் போகும் தாக்கத்தின் முதற்படியாகவே அமெரிக்காவின் இந்தப் பாதுகாப்புக் கரிசனை தற்போது நோக்கப்படுகிறது.

அடுத்தக்கட்டப் பாய்ச்சலிற்கு தமிழர்களை இட்டுச் செல்லும் பணியை நாடு கடந்த தமிழீழ அரசு மேற்கொள்ளும் என்றே நம்பப்படுகிறது. (ச-5)

# புதிய அரசி...

கட்சிகளாக பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.

இதேவேளை இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சி உட்பட ஏற்கனவே 66 அரசியல் கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# விடுதலைப்புலிகள் தடைக்கு...

உத்தரவிட்டது. தடை உத்தரவு குறித்து விவாதிக்க டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி விக்ரமஜித் தலைமையில் சட்ட விரோத செயல்கள் தடுப்பு ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.

இந்த ஆணையத்தின் 2வது அமர்வின் முதல் நாள் கூட்டத்தின் போது, தமிழக மக்கள் உரிமை கழகம் மற்றும் பழ.நெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கம் சார்பில் விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்க கூடாது என ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் மீதான விசாரணை நடந்தது. நேற்றும் விசாரணை தொடர்ந்து நடைபெற்றது. அப்போது அவர்கள் தரப்பில் தீர்ப்பாயத்தில் அரசு தரப்பிடம் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டனர்.

ஆனால் நீதிபதி விக்ரம் அஜித்சென் இதற்கு அனுமதிக்கவில்லை. தடை செய்யப்பட்ட இயக்கமோ அல்லது அதன் நிர்வாகிகளோ அல்லது உறுப்பினர்களோதான் இதில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முடியும்.

ஆனால் நீங்கள் இந்த 3லும் இல்லை. எனவே இரு மனுக்களையும் தள்ளுபடி செய்கிறேன் என்று கூறினார். அதே நேரத்தில் தடைக்கு எதிரான ஆதாரங்கள், காரணங்கள் இருந்தால் தாக்கல் செய்யலாம் என உத்தரவிட்டார். (ச-5)

# கிளிநொச்சி...

த.குரு குலராஜாவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இவ் விடயம் குறித்து மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் இதன்போது ஆசிரியர்களுக்குத் தெரிவித்தது டன் ஆசிரியர் தின வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்தார். (ச-5)

# இராணுவ...

பிடப்படுகின்றது.

இதேவேளை சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது தொடர்பில் நாட்டு மக்கள் காட்டிவரும் அக்கறையை அறிந்து கொள்வதற்காக பெருமளவிலான புலனாய்வு அதிகாரிகள் நாடு முழுவதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த சிங்கள இணையம் மேலும் தெரிவித்துள்ளது.

நடைபாதை வியாபாரிகள், முச்சக்கர வண்டி சாரதிகள், லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் போன்ற தோரணையில் இந்தப் புலனாய்வு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (ச-5)


U.S. DEPARTMENT of STATE

**2012 ஆம் ஆண்டுக்கான அமெரிக்கன் லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்**

**திருமுருகன் கொம்நெற்**

259, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0212227835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.



**கலைமகள் அழகு நிலா**



பயிற்சி நிலையம்

ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.

**பயிற்சிகள்**

- ★ Facial (ஏழு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening (2 வகை)
- ★ Hair Perming (2 வகை)
- ★ Hot oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure Manicure
- ★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- ★ Bleaching
- ★ Bridal make up (6 வகை)

தொடர்புகள்: 077 3719071 021 4908151

பயிற்சிக் கட்டணம்:- 4000/=
பயிற்சி ஆரம்பம் :-10 /10/2010
பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-1358)


# அறிவித்தல்

## Oral and Dental Wing of Mc Lead Hospital, Inuvil.

## வாய் பல் சிகிச்சைப் பகுதி, மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்

ஸ்தாபிதம்:1848



அதிநவீன உபகரணங்கள், வசதிகள் கொண்ட இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய் பல் சிகிச்சைப் பகுதியில் சகல சிகிச்சை முறைகள் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

1. திங்கள் தொடக்கம் சனி வரை -மாலை 4.00 மணி.
2. ஞாயிறு -காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரை
3. கிழமை நாள் (week day) அல்லது சனிக்கிழமை அரசாங்க விடுமுறையாயின் அந்நாளில் -காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரை.

Dr.R.விசாகறூபன், பல்வைத்திய நிபுணர் அவர்களால் சிகிச்சை நடாத்தப்படும்.

Medical Superintendent
வைத்திய மேலதிகாரி

(2618)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு குணசிங்கம்

சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு குணசிங்கம் 06.10.2010 (நேற்று) அன்று அகால மரணமடைந்துள்ளார். இவர் விமலராணியின் (நூலகர், வட்டுக்கோட்டை பிரதேசசபை) அன்புக் கணவரும், முத்துக்குமாரு விசாலாட்சி தம்பதிகளின் ஏக புத்திரனும் கந்தையா- அன்னம்மாவின் மருமகனும் ரேணுகா, சோபிகா (இலங்கை வங்கி, காரைநகர்), சிந்துஜா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரசாத் (லண்டன்), கோணாத் ஆகியோரின் மாமனாரும் இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரன் (அதிபர், பண்ணாகம் மெய் கண்டான் மகா வித்தியாலயம்), ஞானகுலசேகரன் (கணக்காளர், கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், வரதராஜன், கோபிசிறி, கமலேஸ்வரி, சுரேந்திரகுமாரன் (விரிவுரையாளர்-சமுதாய மருத்துவத் துறை, பல்கலைக்கழகம்), செந்தில்குமரன், சுஜாதா, மீரா ஆகியோரின் மாமனாரும் ராஜகுமாரனின் சகலனும் ரேணுகாவின் (மாவட்ட இணைப்பாளர் சர்வோதயா) சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (07.1.2010) பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்தின் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சுழிபுரம் மத்தி, சுழிபுரம். தகவல்: மனைவி

0213215759, 0779992967

(C-1360)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.